உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

மலர்-6 இதழ்-167

ஆகஸ்ட் 16-31 2023

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine



## கோபுரம் சன்னதியை ஏற்காத அம்மன் திறந்தவெளியில் மரம், செடி, கொடியை பந்தலாக கொண்டு ஊரை காக்கும்

# காட்டு செல்லியம்மன்


# நட்சத்திர நாட்களும் திருவண்ணாமலை லிங்கங்களும்

திருவண்ணாமலையில் எந்த லிங்கத்தை எந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வழிபட வேண்டும்...

| | |
|---|---|
| இந்திர லிங்கம் | கேட்டை |
| அக்னி லிங்கம் | கார்த்திகை |
| எம லிங்கம் | சதயம் |
| நிருதி லிங்கம் | மூலம் |
| வருண லிங்கம் | பூராடம் |
| வாயு லிங்கம் | ஸ்வாதி |
| குபேர லிங்கம் | பூரட்டாதி |
| ஈசான லிங்கம் | திருவாதிரை |

www.aanmeegamalar.com

உங்கள் ஜாதகப்படி பிறப்புலக்னத்திற்குரிய பாவாதிபதிகள் மேற்குறித்தநட்சத்திரங்களில் நிற்கிறார்களோ அந்த பாவாதி பதிகளுக்கு அதற்குரிய லிங்கத்தை தரிசித்து வழிபடுவதன் மூலம் பலன் கிடைக்கும்.



உதாரணமாக ஒருவருக்கு 2–5–8–11 என்ற பண பர ஸ்தானத்திற்குரிய கிரகங்கள் பூரட்டாதி யில் நின்றால் அவர் பூரட்டாதி நட்சத்திரம் வரும் நாளில் குபேர லிங்கத்தை வழிபடலாம்.

இதன் மூலம் அவருக்கு பொருளாதார மேன்மை கிடைக்கும்.

உதாரணமாக ஒருவருக்கு பத்தாம் பாவத்தின் அதிபதி ஸ்வாதியில் இருந்தால் அவர் ஸ்வாதி நட்சத்திரம் வரும் நாளில் வாயு லிங்கத்தை வழிபட வேண்டும் இதனால் அவருக்கு வேலை, தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும்.


மேற்கண்டவாறு உங்களுக்குரிய நட்சத்திர நாளில் வழிபட்டால் முழு பலனும் கிடைக்கும்.

# யோகரகசியத்தின் வெளிப்பாடு

பொதுவாக பல ஆலயங்களில் தெய்வங்கள் கண்களை மூடிக்கொண்டே பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்கள்.

இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் ஸ்ரீ மஹா விஷ்ணு விழிகளை மூடி படுத்திருந்தால் அவர் எவ்வாறு மக்கள் குறை தீர்ப்பார்? என கேட்பவர்களுக்கு!

விவேகானந்தர் வாழ்வில் நடந்த சம்பவத்தை கூறினால்விளங்கும்.



www.aanmeegamalar.com

விவேகானந்தரின் 12 வயதில் பள்ளிவகுப்பில் பூகோள பாடம் நடக்கிறது. இவரோகண்மூடி கிடக்கிறார். ஆசிரியர். பிரம்பால் இரண்டு அடி தருகிறார்

பாடம் முடிந்ததும் தான் நடத்திய பாடத்திலிருந்து சில கேள்விகளை கண்விழித்துகேட்டிருந்த மாணவர்களிடம் கேட்க கிட்டத்தட்ட அனைவருமே விழிக்கின்றனர்.

நரேந்திரனையும் (விவேகானந்தர்) கேட்க, அனைத்து கேள்விகளுக்கும் விடைகளை கூறியதைக் கேட்ட ஆசிரியர் வியப்பில் ஆழ்ந்தார். ஏதோ தூங்குவதாக எண்ணியவன் தியானத்தில் இருந்தும் பாடங்களை உள்வாங்கி கொண்டிருக் கிறான் என்பதை அறியாது போனோமே! என வருந்தினார்.

நம் பரமாத்மாவும் நம்மை நாம் வேண்டுவதை உணர்கிறார்.

இதுவே யோகரகசியம்!

# 4,448 வகையான வியாதிகளை தீர்த்து வைக்கும் மருத்துவத்தின் தலைமை பீடம்

மயிலாடுதுறை மாவட்டம் சிதம்பரத்தில் இருந்து மயிலாடுதுறை செல்லும் வழியில் உள்ள மிக பழமை வாய்ந்த காவிரி வடகரைதலங்களில் 16–வது தலமாகவும், தேவாரபாடல் பெற்ற 274 தலங்களில் 16 வது தலமாகவும் உள்ளது வைத்தீசுவரன் கோயில்.




அங்காரகனுக்குவெண் குஷ்ட நோய் வந்தது. அப்போது அசரீரி ஒன்று ஒலித்தது. வைத்தீசுவரன் கோயில் சென்று ஒரு மண்டலம் சித்தாமிர்த குளத்தில் குளித்துவிட்டு வைத்திய நாதசுவாமியை வணங்கினால் ரோகம் குணமாகிவிடும் என்று கேட்டது.

இதையடுத்து அங்காரகனும் இங்கு வந்து வழிபட்டு நோய் குணமானது. இந்த வைத்தியத்துக்கு சுவாமி மருந்து தயார் செய்தபோது பார்வதி தைல பாத்திரம் கொண்டு வந்ததால் அம்பாளுக்கு தைல நாயகி என்று பெயர் வந்தது. இங்கு மொத்தம் ஐந்து சந்நிதிகள் உள்ளன.

4,448 வகையான வியாதிகளை தீர்த்து வைக்கும் மருத்துவத்தின் தலைமை பீடம் இது.

இங்கு புற்று மண், அபிஷேக தீர்த்தம், வேப்ப இலை, அபிஷேக சந்தனம், அபிஷேக விபூதி இவைகளைகொண்டு "திருச்சாந்து' எனப் படும் உருண்டை தயாரிக்கப்படுகிறது.

இதைச் சாப்பிட்டால் தீராத நோய்கள் குணமாகும் என்பது நம்பிக்கை. தோல் நோய் களுக்கு, இங்குள்ள புனுகு எண்ணெய் வாங்கி தேய்த்து நீராடுகின்றனர்.

வைத்தியநாதர் தன்னை வணங்கும் மக்களின் சாதாரண வியாதிகளை மட்டுமின்றி, பிறவிப்பிணியையே தீர்த்து விடுபவர். இவரை வணங்கினால் மன அமைதி, வேலைவாய்ப்பு, தொழில் விருத்தி, உத்தியோக உயர்வு, திருமண பாக்கியம், குழந்தை வரம், தோஷ நிவர்த்தி ஆகியன உண்டாகுவதாக தல வரலாற்றுக்குறிப்பு கூறும் தலமாக உள்ள

அப்பர் மற்றும் திருஞானசம்பந்தரால் பதிகம் பாடப் பெற்ற தலமாகவும் விளங்குகிறது.






# நல்வாழ்விற்கு வழிகாட்டும் சாக்கடை சித்தர்

சாக்கடை சித்தர் என்பவர் பழனி மலையின் அடிவாரமான அய்யம்புள்ளி பகுதியில் வாழ்ந்து மறைந்த சித்தராவார். இப்பெயரைக் கொண்டே பல்வேறு சித்தர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். கரூர் மாவட்டம் குளித்தலை நகரிலும் சாக்கடை சித்தர் என்றொருவர் இருந்துள்ளார் ஆயினும் பழனியில் வாழ்ந்த இவர் சிறப்பு பெற்றவர்.



சாக்கடை சித்தரின் இயற் பெயர் தெரியவில்லை. இவர் வடநாட்டி லிருந்து தனது 55 வயதில் பழநிக்கு வந்தார்.பழநி மலையில் முருகன் கோயிலுக்கு செல்லுகின்ற அய்யம்புள்ளி சாலையில் உள்ள சாக்கடை மேடையின் மீது கூடாரமிட்டு வாழ்ந்தார்.

சாக்கடை நீரைப் பருகுவதையும் அதி லேயே குளிப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந் தமையால் சாக்கடை சித்தர் என பக்தர்கள் அழைத்தனர்.

இவர் எப்பொழுதும் மௌனமாகவே இருப்ப தனால் மௌன சித்தர் என்றும் அழைக்க பட்டார். மேலும் இவரது பக்தர்கள் இவரை தொட விடாமல் பார்த்து கொள்வாராம் மீறி தொட்டால் சத்தமாக கத்துவாராம் அல்லது அடிப்பாராம்.

இவரது பக்தர்கள் இவரது அருகில் அமர்ந்து திருவாசகம், அபிராமி அந்தாதி போன்றவற்றை பாராயணம் செய்தால் இவர் அதை ஆனந்தமாக கேட்பாராம். அமெரிக்காவில் இருந்து வந்து கூட இவரிடம் ஆசிகள் வாங்கி பயன்பெற்ற அன்பர்கள் உள்ளனர் என்றும் இவரது பக்தர்கள் தெரி விக்கின்றனர்.

பழனி சாக்கடை சித்தர் 2016 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 14 ஆம் நாள், சஷ்டி திதியில், திருவோண நட்சத்திரத்தில் சமாதி நிலை அடைந்தார். அவர் சமாதி நிலை அடைந்த பிற கும் அவரை இன்னும் அவரது பக்தர்கள் வழி படுகின்றனர்.

சாக்கடை சித்தரை வந்து வழிபடுவதால் நம் தீய கர்ம வினைகள் நீங்குவதாகவும் பிரச்சனைகள் குறைந்து சரியான வழி கிடைப்பதாகவும் அவரை வந்து வழிபடும் அன்பர்கள் தெரிவிக்கின்றனர். நேரில் சென்று அவருடைய ஜீவசமாதியை வழிபட்டு பயன் அடையுங்கள்.

# நான்கு வகையான மந்திரங்கள்

குறிப்பிட்ட ஒலியின் மூலம் குறிப்பிட்ட தெய்வத் திற்குரிய பலன்களை மனித இனத்திற்கு தரும் அனைத்தும் மந்திரங்கள் என்று கூறலாம்.

இந்த வகையில் மந்திரங்கள் நான்கு வகைகளாக கூறலாம்.

1. சித்த மந்திரங்கள்
2. சுத்த மந்திரங்கள்
3. சாத்திய மந்திரங்கள்
4. சத்துரு மந்திரங்கள்.

புரச்சரணம் செய்வதால் அந்த மந்திரம் நினைத்த பலனைக் கொடுக்கும் அளவிற்குச் சித்தியாகிவிடும். குறிப்பிட்டஅளவு ஜபம் முதலியவற்றைச்செய்தால் சித்தியளிப்பவை உண்டு. அத்த கையவை சித்த மந்திரங்கள் எனப்படும்.


www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

குறிப்பிட்ட அளவு ஜபம் செய்யாமலேயே குருவிடமிருந்து உபதேசம் பெற்றதும், ஜெபம் செய்ததும் சித்தி தரவல்ல மந்திரங்கள் உண்டு. அத்தகையவை சுரித்தம் எனப்படும்.

முன்பிறவிகளில் ஒருவன் மந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கலாம். மந்திர தேவதையிடம் தவறாக நடந்து கொண்டு அதற்கு எதிரியாகி இருக்கலாம். அத்தகையவன் இப்பிறவியில் மந்திர ஜபம் செய்யும்போது காப்பாற்ற வேண்டிய மந்திரம் அவனையும், அவன் குடும்பத்தையும் தண்டிக்கும். அத்தகைய மந்திரங்கட்கு அரிமந்திரம் அல்லது சத்துரு மந்திரம் என்று பெயர்.

மேற்கண்ட நான்கு வகை மந்திரங்களை அறிந்து கொள்ள வேண்டி ஜாதகம் பார்ப்பது போல கட்டகங்கள் போட்டு விடை காண்பது சித்தாரி கோஷ்டம் எனப்படும். அவ்வாறு சோதித்துப் பார்த்த பிறகே குரு சீடனுக்கு மந்திர உபதேசம் செய்வார். திருமணம் நடப்பதற்கு முன்பு பெண்ணுக்கும் பிள்ளைக்கும் பொருத் தம் பார்ப்பதே சித்தாரி கோஷ்டம்.

சில மந்திரங்களுக்கு இவ்வாறு கோஷ் டம் பார்ப்பது இல்லை. ஓர் எழுத்து கொண் டவை, மூன்று எழுத்து கொண்டவை, மிருத்தியுஞ்சயம், காளி, சியாமளா, சண்டிகை, இராமன், ஸ்ரீவித்யா, புவனேஸ்வரி, ராஜசியாமளா முதலிய மந்திரங்கட்கு இவ்விதி இல்லை. எப்போதும் யாவருக்கும் சித்தமான மந்திரங்கள் இவை.

பீஜ மந்திரங்கள்:

மந்திரங்கள் என்பவை வெறும் சப்தங்கள் அல்ல. அந்தச் சப்தங்களிலிருந்துதான் படைப்பே தொடங்கியது என்கிறார்கள் ஞானிகள். ஓம் என்ற மந்திரத்திலிருந்தே பஞ்ச பூதங்கள் தோன் றின என்கிறார் திருமூலர்.




## மூச்சின் மூல ரகசியம்

மூச்சு ஒருநாழிகைக்கு 360 சுவாசம்

ஒருநாளைக்கு 21,600 சுவாசம்

பூரகம் மூச்சை உள்ளே இழுப்பது.

கும்பகம் உள்வாங்கிய மூச்சை உள்ளே நிறுத்துவது.

ரேசகம் மூச்சை வெளிவிடுவது.

எந்த நாசியில் மூச்சு ஓடுகின்றதோ அதற்கு பூரணம் என்று பெயர்.

மூச்சுப் பயிற்சி செய்யும் பொழுது 12 அங்குலம் காற்றை உள்ளிழுத்து 8 அங்குலம் நிறுத்தி 4 அங்குலம் வெளிவிட வேண்டும்.

இதே முறையில் ஒருவனுக்கு சுவாசம் தொடர்ந்து ஓடினால் அவன் 120 வருடங்கள்வாழ்வான். இவ்வாறு சுவாசம் குறைய ஆயுளும் கூடும். சுவாசம் அதிகரிக்க அதிகரிக்க ஆயுள் குறையும்.

அதனால்தான், சுவாசத்தை அடக்குவதால் ஆமைகள் 300 வருடங்கள், 400 வருடங்கள் வாழ்கின்றன. அதேபோல்தான் பாம்பு 800 வருடம், 1000 வருடம் வாழ்கின்றன.

## நம்முள் சுவாசம் நடக்கும் அளவு

அமர்ந்திக்கும் போது – 12 அங்குலம்

நடக்கும் போது – 16 அங்குலம்

ஓடும் போது – அங்குலம்

உறங்கும் போது – 36 அங்குலம்

உடலுறவு கொள்ளும் – 64 அங்குலம் போது

## சுவாசம் குறைத்தால் ஏற்படும் நன்மைகள்

| | |
|---|---|
| 11 | அங்குலமாக குறைந்தால் உலக இச்சை நீங்கும். |
| 10 | அங்குலமாக குறைந்தால் ஞானம் உண்டாகும். |
| 9 | அங்குலமாக குறைந்தால் விவேகி ஆவான். |
| 8 | அங்குலமாக குறைந்தால் தூர திருஷ்டி காண்பான். |
| 7 | அங்குலமாக குறைந்தால் ஆறு சாஸ்திரங்கள் அறிவான். |
| 6 | அங்குலமாக குறைந்தால் ஆகாய நிலை அறிவான். |
| 5 | அங்குலமாக குறைந்தால் காயசித்து உண்டாகும். |
| 4 | அங்குலமாக குறைந்தால் அட்டமாசித்து உண்டாகும். |
| 3 | அங்குலமாக குறைந்தால் நவகண்ட சஞ்சாரம் உண்டாகும். |
| 2 | அங்குலமாக குறைந்தால் கூடுவிட்டு கூடுபாய்தல். |
| 1 | அங்குலமாக குறைந்தால் ஆன்ம தரிசனம். |

உதித்த இடத்திலேயே நிலைத்தால் சமாதி நிலை அன்ன பாணம் நீங்கும்.

## எந்தெந்த நாட்கள் எந்த சுவாசம் ஓட வேண்டும் என்பதைப் பற்றி காண்போம்

ஞாயிறு, செவ்வாய், சனி இம் மூன்று நாட்களிலும்
**சூரியகலை ஓட வேண்டும்.**

வெள்ளி, திங்கள், புதன் இம் மூன்று நாட்களிலும்
**சந்திரகலை ஓட வேண்டும்.**

வியாழக்கிழமை பூர்வபட்சம்(வளர்பிறை)
**சந்திர கலை ஓட வேண்டும்.**

அமரபட்சம் (தேய்பிறை)
**சூரிய கலை ஓட வேண்டும்.**

இம் முறையில், அதிகாலை 4 மணிக்கு சுவாசம் நடக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து நடந்தால் காரியங்கள் அனைத்தும் சித்தியாகும்.

சனிக்கிழமை மட்டும் அதிகாலை 4 மணி முதல் இரவு 12 மணி வரை சூரிய கலையில் சுவாசம் ஓட வேண்டும்.

# ஆத்மா-மனம்

## மனிதனே தேர்வு செய்யும் வாழ்க்கை முறை

பூமியில் பிறக்கும் ஒவ்வொரு ஜீவனுக்கும் ஜீவ ஸ்வாதந்தரியத்தை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

இந்த வகையில் ஒவ்வொரு ஜீவனுக்கும் இரண்டு வாய்ப்புகளை கொடுத்து அனுப்பப்படும்.

ஒன்று 1.ஆத்மா மற்றொன்று 2. மனது!

ஆத்மாவை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்தால், இறைவனை சென்றடையலாம்!

மனதை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்தால், பாவங்கள் செய்து இந்த பூலோகத்தில் முடிவில்லா பிறவிகளை எடுத்து வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியதுதான்!

ஒரு ஆத்மா கர்ப்பத்தில் சிசுவாக வளர்ந்து கொண்டிருக்கும் பொழுது, ஏழாவது மாதம் வரை ஞாபகத்தில் இருக்குமாம்..

ஏழாவது மாதத்தில், கர்ப்பத்தில் இருக்கும் சிசுவிற்கு எல்லாம் ஞாபகம் வந்து அது எம் பெருமானை அழைக்குமாம்...

என்னை இனிமேல் பிறக்க வைக்காதே. எனக்கு இந்த மனிதப்பிறவி வேண்டாம் என்று கெஞ்சுமாம்.

ஆன்மிகமலர்

அப்பொழுது ஷடம் என்னும் வாயு எம்பெருமானை அழைக்கும்.

அது ஏழாவது மாத சிசுக்களை மூடி அவைகளை சுற்றி ஒரு கவசத்தை உருவாக்கும்!

அந்தக்கவசத்திற்கு சென்ற பிறவியின் ஞானம், ஞாபகங்கள் எல்லாவற்றையும் மறக்க வைக்கும் சக்தி உள்ளது!

சிசு குழந்தையாக பிறந்து, இந்த பூலோகத்தில் ஒரு பிறவியை எடுத்து கலி காலத்தின் தாக்கங்களாலும், விஹாரங்களாலும் பாதிப்புக்கு உள்ளாகி எல்லா பாவங்களையும் செய்து திரும்ப ஒரு பிறவிக்கு வித்திட்டு இந்த பூலோகத்தில் வந்து பிறந்து விடுகிறோம்.

வைஷ்ணவ கோவில்களில் பெருமாளின் திருவடிகளை கொண்ட சடாரி என்னும் பாதத்தை




நம் தலையில் சாற்றுவார்கள்!

அது ஏதற்கு என்றால், "நான் கர்ப்பத்தில் இருந்தாலும் ஒரு பிறப்பை எடுத்து இருந்தாலும் எனக்கு உன் நினைவாகவே இருக்க வேண்டும்".

"மறதியை கொடுக்காமல் 'ஷடம்' என்னும் வாயுவிடம் எனக்காக போராடி உன்னுடைய ஞாபகம் எப்பொழுதும் இருக்கும்படி எனக்கு அருள்வாயாக" என்று பெருமாளை வேண்டி கொள்வது தான் நமக்கு சடாரியை தலையில் சாற்றும் தாத்பர்யம்!

மேலும், ஒவ்வொரு மனிதனுக்குள்ளும்இறைவன் அந்தர்யாமியாய் இருந்து கொண்டிருக்கிறான்.

நாம் சிலசமயம் தவறான வழியில் ஒரு காரியத்தை செய்யும்பொழுது நமக்குள் இருந்து ஒரு குரல் நம் தவறை சுட்டிக்காட்டும், அதுவே அந்தர்யாமியாய் நமக்குள் இருக்கும் எம்பெருமான்!

ஏதாவது ஒரு பிறவியில் நாம் திருந்தி, ஆத்மாவை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்து நம்மிடத்தில் வருவான் என்று இறைவன் பல சந்தர்ப்பங்கள் அளிக்கிறானாம்! ஏனெனில் நாம் அவனது சொத்து!

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்** மெயில்

புத்தகத்தில் (e-book)

வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD

eBook

DOWNLOAD

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

**170** க்கும் மேற்பட்ட

இதழ்களை




**aanmeegamalar.com**

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

# புனிதம் வாய்ந்த கங்கை நதியின் மகிமை







ஸ்கந்த புராணம், காசி காண்டம் புனித கங்கை நதியின் முக்கியத்துவத்தையும் தெய் வீக சக்திகளையும் பல அத்தியாயங்களில் விவரிக்கிறது. அத்தியாயங்கள் 27, 28 மற்றும் 29 இல் காசி காண்டம் கங்கை நதியைப் போற்றி யுள்ளது,

பெரிய முனிவர் (ராஜ ரிஷி) பகிரத மன்னன் ஒரு பிராமணனின் சாபத்தால் அவதிப்பட்டான். சிவபெருமானிடம் கடும் தவம் செய்து கங்கை நதியை பூமிக்கு கொண்டு வந்தார். பிரளயத்திற்குப் பிறகு, பகவான் சிவனும் பார்வதி தேவியும் பூமியில் தோன்றினர், பகவான் விஷ்ணுவும் காசியில் தோன்றினார். பகவான் விஷ்ணு தனது சுதர்சன சக்கரத்தால் ஒரு பெரிய குளத்தை தோண்டி அதை தனது தெய்வீக வியர்வையால் நிரப்பினார். இந்த குண்டம் சக்ரபுஷ்கரிணி தீர்த்தம் என்று அழைக்கப்பட்டது. சிவபெருமானின் காது கடுக்கன் சக்ரபுஷ்கரிணி தீர்த்தத்தில் விழுந்தது, பின்னர் குளம் மணிகர்ணிகா (மணி என்றால் ரத்தினம் என்றும் கர்ணிகா என்றால் காது என்றும் குறிப்பிடப்படுகிறது) என்று அழைக்கப் பட்டது.

கங்கை நதி காசியில் ஓடத் தொடங்கியபோது, அவிமுக்த க்ஷேத்திரம் மிகவும் பக்திமயமானது.

உலகில் உள்ள அனைத்து புனித குளங்கள், ஆறுகள் மற்றும் ஏரிகளின் ஆன்மீக சக்தியை கங்கை நதி கொண்டுள்ளது.

கங்கை நதியில் ஒரு முறை கூட நீராடும் ஒரு பக்தர். அனைத்து புனித குளங்களிலும் நீராடிய பலனைப் பெறுகிறார்.

ஒரு நபர் எங்கு வேண்டுமானாலும் குளிக்க லாம் ஆனால் அவர் குளிக்கும் நேரத்தில் "கங்கா, கங்கா" என்ற வார்த்தைகளை உச்சரித்தால்,

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.




www.aanmeegamalar.com

அவர் புனித கங்கையில் நீராடிய பலனைப் பெறுகிறார். என்று நம்பப்படுகிறது.

தெரிந்தோ தெரியாமலோ செய்யும் பக்தனின் பாவங்களை கங்கை நதி அழிக்கிறது. நடக்கும்போதும், உட்கார்ந்து, பிரார்த்தனை செய்யும் போதும், சாப்பிடும்போதும் அல்லது உறங்கும் போதும் எப்போதும் புனித கங்கையைப் பற்றி சிந்திக்கும் பக்தன் புனித நிலை பெறுகிறான். புனித கங்கையில் தனது முன்னோர்களுக்கான சடங்குகளைச் செய்யும் ஒரு பக்தர் தனது முன்னோர்களை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்கிறார். அவர்கள் பல தசாப்தங்களாக திருப்தியுடன் இருக்கிறார்கள்.

ஒரு சிவலிங்கத்தை வழிபட்டால் உலகம் முழுவதையும் வணங்கிய பலனைத் தருவது போல, கங்கை நதியில் நீராடுவது உலகில் உள்ள அனைத்து புனிதக் குளங்களிலும் நீராடிய பலனைத் தரும்.

கங்கை நதியில் நீராடி சிவலிங்கத்தை வழிபடும் ஒரு பக்தர். ஆன்மீக விரதம், தானம், கடுமையான தவம் மற்றும் துறவு, ஹோமங்கள் போன்ற பல்வேறு சடங்குகளை மேற்கொள்வதை விட அதிக நன்மைகளைப் பெறுகிறார்.

விரும்பியோ, வேண்டாமலோ நெருப்பைத் தொட்டால் சுட்டு விடும், இதேபோல், ஒரு பக்தன் விரும்பியோ அல்லது வேண்டாமலோ புனித கங்கையில் நீராடினால், அந்த நதி அவருடைய அனைத்து பாவங்களையும் விழுங்கிவிடும்.

ஒருவன் தன் முன்னோர்கள் மீது உண்மையான பக்தியுடன், கங்கையில் நீராடி புனித கங்கை நீரால் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தால், அவனுடைய முன்னோர்களுக்கு, அவர்கள் நரகத்தில் வசித்தாலும் பெரும் சேவை செய்கிறான். அவர்கள் சொர்க்கத்திற்கு தள்ளப் படுவார்கள்.

ஒரு பக்தன் கங்கையில் நீராடுவதன் மூலம் புண்ணியத்தைப் பெறுகிறான் அதே அளவு புண்ணியத்தை மற்றொரு நபரை கங்கையில் நீராட வழிகாட்டுவதன் மூலமோ அல்லது வழிநடத்துவதன் மூலமோ பெறுவான். கங்கை

www.aanmeegamalar.com

நதியில் ஒரு முறை நீராடுவதன் மூலம், ஒரு பக்தர் அஸ்வ மேத யாகம் செய்த பலனைப் பெறுகிறார். ஒருவர் ஒரு மாதம் புனித கங்கையில் நீராடினால், அவர் இந்திரனுடன் வசிப்பார். ஒரு அதிர்ஷ்டசாலி ஒரு வருடம் புனித கங்கையில் நீராடினால், அவர் விஷ்ணுவின் இருப்பிடத்தை அடைவார்.

ஒரு நேர்மையான பக்தன் தனது வாழ்நாள் முழுவதும் கங்கை நதியில் நீராடினால், அவன் வாழ்வில் மோட்சத்தையும் உயர்ந்த நிலையையும் அடைகிறான். கங்கையில் நீராடுவதற்கு ஒருவர் சுப நேரம் முகூர்த்தம் போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை, ஏனெனில் புனித கங்கைக்கு அத்தகைய விதிகள் பொருந் தாது.

புனித கங்கைக் கரையில் வழங்கப்படும் எந்த வகையான தானம், பல பலன்களைத் தரும். ஒரு பக்தன் தகுதியான ஒருவருக்கு ஒரு பசு மற்றும் கன்று தானம் செய்தால், அவர் நிச்சயமாக சொர்க்கத்தை அடைவார். தவிர, அவர் வாழ்நாளில், செல்வம் மற்றும் உணவு தானியங்களுக்கு

எந்தப் பற்றாக்குறையையும் சந்திக்க மாட்டார். கங்கை நதிக்கரையில் கற்றறிந்த பிராமணனுக்கு ஒரு பக்தன் சிறிதளவு தங்கத்தை தானமாக அளித்தால், அவன் எங்கு வாழ்ந்தாலும் அவன் மதிக்கப்படுவான். வணங்கப்படுவான். தென்னிந்தியர்களால் மேற்கொள்ளப்படும் காசி யாத்திரையில் இறுதி சடங்கு கங்கா பூஜை மற்றும் தம்பதி பூஜை கங்கா பூஜை என்பது புனித நதியான கங்கைக்கான வழிபாடு/ பிரார்த்தனைகள் மற்றும் தம்பதி பூஜையில், காசிக்கு தங்கள் வாழ்க்கையை அர்ப் பணித்த திருமணமான தம்பதிகளை பக்தர் கௌரவிக் கிறார். மற்றவற்றுடன், அத்தகைய தம்பதிகளுக்கு ஒரு சிறிய அளவு தங்கம் நன்கொடையாக வழங்கப்படுகிறது.

பிறந்த நாளில் புனித கங்கையில் நீராடுவது பக்தனின் அனைத்து பாவங்களையும் போக்கி விடும். வைசாக மாதம், ஷ்ராவண மாதம் மற்றும் கார்த்திகை மாதங்களில் நதியில் குளிப்பது பல பலன்களைத் தரும். அத்தகைய செயலுக்கு அமாவாசை ஒரு நல்ல நாள். அனைத்து சங்கராந்திகளிலும் புனித கங்கையில் நீராடுவது சாதாரண நாளை விட ஆயிரம் மடங்கு பலன் தரும். (ராசிகளில் மேஷம், ரிஷபம் தொடங்கி மிதுனம் வரை பன்னிரண்டு ராசிகள் அல்லது வீடுகள் உள்ளன. சூரியன் மேஷ ராசியில் பிரவேசித்தால் மேஷ சங்கராந்தி, ரிஷபத்தில் நுழைந்தால் ரிஷப சங்கராந்தி. மிக முக்கியமான




சங்கராந்தி சூரியன் மகர ராசிக்குள் நுழையும் சமயம் மகர சங்கராந்தி.) சங்கராந்தி நாட்கள் பொதுவாக ஒவ்வொரு மாதமும் 14 அல்லது 15 தேதிகளில் வரும். இதை பஞ்சாங்கத்திலிருந்து அறியலாம். சூரிய அல்லது சந்திர கிரகணத்தின் போது. ஒரு பக்தர் கங்கையில் ஸ்நானம் செய்தால், அவர் சாதாரண நாட்களை காட்டிலும் ஒரு லட்சம் மடங்கு பலன்களைப் பெறுவார்.

ஒரு பக்தர் தனது மூதாதையர்களுக்கு கருப்பு எள் கொண்டு சடங்குகளைச் செய்யும்போது, அவருடைய முன்னோர்கள் மெதுவாக சொர்க் கத்தில் நுழைகிறார்கள். அவர்கள் ஏற்கனவே சொர்க்கத்தில் இருந்தால், அவர்கள் சிறந்த பதவிகளைப் பெறுவார்கள்.

சடங்குகளில் பயன்படுத்தப்படும் எள் விதை களின் எண்ணிக்கையைப் பொறுத்து அவர்கள் பல ஆண்டுகள் சொர்க்கத்தில் இருப்பார்கள்.

பக்தன் அறியாத பல பாவங்களை அவனது முன்னோர்கள் செய்திருக்கலாம். அவர்கள் கும்பி பாக்கம், ரௌரவம், தாமிஸ்ரம் போன்ற நரகத்தில் பல்வேறு இடங்களில் சோதனைகளை எதிர்கொண்டிருக்கலாம்.

ஆனால் ஒரு பக்தன் கங்கை நதியில் விதிப்படி




தங்கள் சடங்குகளைச் செய்தால், அவனது முன்னோர்கள் நரகத்திலிருந்து விடுபட்டு மெதுவாக ஆனால் நிச்சயமாக சொர்க்கத்தை நோக்கி பயணிப்பது உறுதி.

கங்கை நதி தூய்மையானது மற்றும் ஆன்மீக சக்தியை கொண்டது ஆனால் புனித நகரமான காசியில்அவளுடைய சக்தி அதிகரித்தது, அங்கு அவள் உத்தர வாஹினி ஆகிறாள் (வடக்கு நோக்கி செல்கிறாள்).

கங்கை ஒரு வேகத்துடன் காசியில் நுழைந்தபோது, சிவபெருமான் காசி யின் நுழைவாயிலுக்கு சற்று முன்பு தனதுதிரிசூலத் தை எறிந்தார். இதனால் நதியின் வேகம் சற்று குறைந்தது. கங்கை, சிவபெரு மானிடம், தான் எப்போதும் காசியில் தங்கி. அதன் மக்களுக்கு சேவை செய்வேன் என்று உறுதியளித்தாள். எனவே, கங்கை காசியில் வற்றாது.

காசியில் ஒருவர் இறந்தால் அவர் மோட்சத்தை அடைவார். ஒருவர் மற்ற இடங்களில் இறந்தாலும் அவரது உடலை காசியில் தகனம் செய்தால் அவர் மோட்சத்தையும் அடைகிறார். இதேபோல், ஒருவர் இறந்து வேறு இடத்தில் தகனம் செய்திருக்கலாம். ஆனால் அவரது சாம்பல் மற்றும் எலும்புகள் (அஸ்தி) புனித கங்கையில் மூழ்கினால், அவர் சொர்க்கத்தை அடைவார். கங்கையில் எலும்பையும் சாம்பலையும் மூழ்கடிப்பதால் ஏற்படும் பலன்கள் இந்நூலின் வேறு இடத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒருவர் காசியை விட்டு வெகு தொலைவில் இருந்து, கங்கையில் நீராடிய பலனைப் பெற விரும்பினால், காசிகண்டம் கங்கா சஹஸ்ர நாமத்தை விதித்துள்ளது. (சஹஸ்ரா என்றால் ஆயிரம். நாமம் என்றால் பெயர்). இவை ஆயிரம் வெவ்வேறு பெயர்களால் புனித நதியான கங்கை புகழப்பட்டது.

எனவே.காசி யாத்திரை செய்யும் தென்னிந்தி யர்கள் பொதுவாக காசியில் குறைந்தபட்சம் இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்கள் தங்கியிருப்பார்கள். ஒரு சடங்கு மத்யானிக மணிகர்ணிகா ஸ்நானம் (நண்பகலில் மணி கர்ணிகாவில் நீராடுதல்) மற்றும் மற்றொரு சடங்கு ஐந்து இடங்களில் பிண்ட தானம் ஆகும்.

தசாஸ்வமேதம், மணிகர்ணிகா, பஞ்சகங்கா மற்றும் வருணா பஞ்ச கட்ட பிண்டம் (ஐந்து முக்கிய கட்டங்களில் சடங்கு) செய்யும் போது, சில யாத்ரிகள் ஒரு முறை மட்டுமே குளிப்பார் கள். மீதமுள்ள கட்டங்களில், அவர்கள் தலை யில் தண்ணீரை தெளிப்பார்கள்.

காசிக்கு தங்களின் மதச் சடங்குகளுக்காக வரும் பக்தர்கள். ஐந்து தலங்களிலும் ஸ்நானம் செய்து, சகல தெய்வீகத்தன்மையுடன் மத்யானிக மணிகர்ணிகா ஸ்நானம் எடுக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இந்த சடங்குகளைச் செய்யும்போது, ஆசிரியர்கள் தங்கள் பிரிந்த தந்தை / பெற்றோர் கள் மற்றும் முன்னோர்களைப் பற்றி சிந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

கங்கை நதியின் சுருக்கமான பதிவு மேலே கொடுக்கப்பட்டுள்ளது. கங்கை நதியின் தெய்வீகத்தன்மையை நாம் வார்த்தைக்குவார்த் தை மொழிபெயர்த்தால், பல புத்தகங்கள் வெளி யிடலாம்.

ஆன்மிகமலர்.காம்

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

# பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சந்திரனை ஆராய்ந்த இந்துக்கள்

# ஜெர்மனியர்களால் திருடப்பட்ட இந்து வேதங்களே உலக நாடுகளின் நிலவு ஆராய்ச்சிக்கு மூலகாரணம்

முதன்முதலாக விமானம் மூலம் வானத்தில் பறந்தவர்கள் யாரென்று கேட்டால் பெரும்பாலோர் அமெரிக்காவைச் சேர்ந்த ரைட் சகோதரர்கள் எனப் பதில் சொல்லுவார்கள்.


ஆனால் உண்மை அதுவல்ல.

உலகில் முதன்முதலாக விமானம் ஒன்றைத் தயாரித்து அதன் மூலம் வானத்தில் பறந்துகாட்டியவர் ஷிவாகர் தல்பாதே என்கிற இந்தியர் தான்.

1895ஆம் வருடம் மும்பையைச் சேர்ந்த ஷிவாகர் தல்பாதே காற்றை விடவும் எடைகூடியதொரு விமானத்தைத் தயாரித்து அதற்கு "மருட்சகா (Marutsakha) என்று பெயரும் வைத்தார். பின்னர் அந்த விமானம் மும்பையின் சௌபாத்தி கடற்கரையில் வெற்றிகரமாகப் பறக்க விடப்பட்டது.

இந்தியன் அதுவும் ஒரு இந்து விமானம் ஒன்றினை உருவாக்கி அதனை விண்ணில் பறக்க வைத்ததை பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பவில்லை. ஷிவாகருக்கு எல்லா விதங்களிலும் அவர்கள் தொல்லைகள் கொடுத்தார்கள். விமானம் தயாரிப்பதற்குத் தேவையான நிதியைத் திரட்டுவதனைத் தடுக்க முனைந்தார்கள். இருந்தாலும் ஷிவாகர் தல்பதே மிகுந்த சிரமத்துடன் அந்தப் பணத்தைத் திரட்டினார்.

தடைகளையெல்லாம் வென்று அவரது விமானம் சௌபாத்தி கடற்கரையில் வெற்றிகரமாகப் பறக்க வைத்தார். பழமையான "வ்யாமானிக சாஸ்த்ரா"வின் அடிப்படையில் கட்டப்பட்டஅந்த விமானத்தில் பாதரசம் எரிபொருளாகப்பயன்படுத்தப்பட்டது. அதனைக் காரணம் காட்டி, ஷிவாகர் தல்பதே பாதரசத்திலிருந்து வெடிகுண்டுகள் தயாரித்ததாகப் பொய்யான குற்றம் சுமத்தி அவரைச் சிறையில் அடைத்தார்கள் பிரிட்டிஷ் காரார்கள்.


www.aanmeegamalar.com

ஷிவாகர் தல்பாதேவும் மருட்சகாவிமானத்தின் வரைபடமும்

ஷிவாகர் பல ஆண்டுகள் சிறையில்கழித்தார். அவர் சிறையிலிருந்து வெளியே வந்து மீண்டும் தனது விமானத்தைப் பறக்க வைப்பதற்கு முன்னால் ரைட் சகோதரர்கள் அவர்களின் விமானத்தை விண்ணில் பறக்கவைத்திருந்தார்கள்.

தன்னுடைய கண்டுபிடிப்பிற்கு அங்கீகாரம் கிடைக்காத மனவருத்தத்துடன் தல்பாதே 1916 ஆம் வருடம் மரணமடைந்தார்.

அன்றைய காலகட்டத்தில் பாதரசத்தை விமான எரிபொருளாக உபயோகிக்க முடியாது என பல விஞ்ஞானிகளின் கருத்தாக இருந்தது. இருப்பினும் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாஸா இன்றைக்கு அதன் விண்கலங்களைப் பறக்கவைக்க பாதரசத்தை உபயோகித்து வருகிறது என்பதனை வெளியில் எவரும் அதிகம் பேசுவதில்லை.

அந்த உண்மை வெளிவந்தால் ஷிவாகர் தல்ப தேக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டிய நிலை வரலாம். இப்படித்தான் இந்தியாவையும், இந்து மக்களின் சாதனைகளையும் உலக நாடுகள் மழுங்கடித்து வருகின்றன.

தற்போது உலக நாடுகள் சந்திரனை குறி வைத்துசந்திரனை நெருங்க எவ்வளவோ முயற்சி செய்து வருகிறது. ஆனால் அந்த நாடுகள் அனைத்தும் இந்திய சாஸ்திரங்களில் குறிப்பிட்ட வழிமுறைகளை திருடித்தான் சந்திரனை நெருங்க முற்படுகிறது என்று பலருக்கு தெரியாது.

1940களில் ஜெர்மானியர்கள் இந்தியாவில் இருந்து களவாடி சென்ற சில அறிவியல் விஷயங் களை, இந்து ஞானியரின் ஓலை சுவடிகளின் விஷயங்களுக்கு விஞ்ஞான வடிவம் கொடுக்க அதிலிருந்து அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் விஷயங்கள் பறக்க அவர்கள் கருவிகளை உரு வாக்கினார்கள்

சீனர்கள் ரஷ்யர்களிடம் இருந்து பிரதி எடுத் தார்கள். இன்று உலகம் காணும் விண்வெளி பந்தயத்தில் அவர்கள் முன்னணியில் இருந்தா லும் அடிப்படை அறிவு ஜெர்மானியர்கள்கொடுத்ததே அந்த ஜெர்மானியர்களுக்கு அந்த ஞானத்தை கொடுத்தது நமது பாரதம்.

18, 19ம் நூற்றாண்டில் ஜெர்மானியர்கள் தமிழக தஞ்சாவூர் சுவடிகளிலும், ஆதிச்ச நலலூரிலும், தஞ்சை பெரியகோவிலும் கல்வெட்டும் சுவடியும் புரட்டி எடுத்து சென்ற அறிவு செல்வம்தான் 1940களில் உலகை மிரட்டியது அதை யாரும் மறுக்கமுடியாது.

இந்துக்களின் செழுமையையும், அறிவையும் குறைகூறி, இந்து தெய்வங்களை வசைபாடி தங் கள் மதங்களை பரப்ப வந்த கூட்டத்தினரின் மாய வலையில் விழுந்த இந்துக்கள் தங்களிடமிருந்த பலத்தை தாங்கள் அறியாமல் போனதும்.

மிகவும் சாதுவாக அனைத்தையும் கடந்து சென்றதன் விளைவுதான், நமது வேதங்களை, நமது கண்முன்னே கிண்டல் கேலி செய்யும் மடையர்களை கண்டிக்காமல் கடந்து சென்ற தாலும் வந்த வினைப் பயன், தங்களிடம்அதிகார மின்மை, அறியாமை, வேதங்களை இந்து ஞானங்களை மூடநம்பிக்கை என ஒதுக்கிய மடதனமெல்லாம் ஜெர்மானியருக்கு வாய்ப்பா யிற்று இதனால் பாரதம் பின்னடைந்தது.

அந்த வகையில். சந்திரயான் நிலவினை நெருங்கும் நேரமிது, அமெரிக்காவும் ரஷ்யாவும் சீனாவும் நமக்கு முன் அதை செய்திருக்கலாம் ஆனால் அவர்களுக்கும் நிலவுக்குமான அறிவு அதாவது அதன் தொலைவு தூரம் அதன் இதர கணக்கீடுகள் பாரம்பரியமாக உண்டா என்றால் இல்லை.

சந்திராயன் நிலாவினை தொடலாம்,நிலாவுக்கு பூமிக்குமான கணக்குகளை விஞ்ஞானம் சொல்ல லாம் ஆனால் அன்றே அதன் தொலைவை இந்துக்கள் தெளிவாக அறிந்திருந்தனர்.





63 நாயன்மாரில் ஒருவர் காரி நாயனார், அவர் எழுதிய கணக்காதிகாரம் பிரசித்தியானது, பெரும் சிவனடியாரான அவரின் அந்த கணக்கு நூலில் பெரும் கணக்கீடுகள் உண்டு

அந்நூல் நீளத்தை சொல்கின்றது இப்படி

"வையணுதுாள் பஞ்சு மயிர்முனை
நுண்மணல்
ஐயெள்ளு நெல்லுடனே
அவ்விரலாம் – பெய்வளையாய்
எட்டின் வழியெல்லாம் ஏற்றியே
அவ்விரலின்
சட்டமதாம் பன்னிரெண்டு சாண்."

- 8 அணுக்கள் கொண்டது ஒரு தூள் (அல்லது துகள் அல்லது கதிரெழுதுகள்),
- 8தூள்கள் கொண்டது ஒரு பஞ்சிற்று (துசும்பு),



- 8 பஞ்சிற்றுக்கள் கொண்டது ஒரு நுண்மணல்,
- 8 நுண்மணல்கள் கொண்டதுஒரு ஐந்தை (அல்லது ஐ அல்லதுசிறுகடுகு).
- 8 சிறுகடுகு கொண்டது ஒரு எள்ளு,
- 8 எள்ளுகள் சேர்ந்தது ஒரு நெல்,
- 8 நெல்கள் கொண்டது ஒரு விரல்.
- 12 விரல்கள் கொண்டது ஒரு சாண்.

இப்படி ஒரு அணு அளவு நுண்ணிய அளவு அன்றே இருந்ததாலே அழகிய சிற்பங்களும் பெரும் ஆலயங்களும் உருவாயின, இந்த கணக்கீடு வழிகாட்டிற்று இன்று அணுகடிகாரம் சொல்லும் நுணுக்கமான அளவை அன்றே சொன்னது இந்துமதம்

இன்னொரு பாடல் கால அளவை சொல்கின்றது

"நிமைநொடி மாத்திரை
நேர்முற் றிதனை
இணைகுரு பற்றும் உயிரென்றார்
அனைய உயிர்
ஆறுசணி கம்மீரா றாகும்வினாடி தாம்
அறுபதே நாழிகையாம்"

- கண்ணிமைக்கும் நேரம் இரண்டு கொண்டது கைநொடி,
- இரு கைநொடி நேரம் ஒரு மாத்திரை,
- மாத்திரிரை இரண்டு கொண்டது குரு,
- இரண்டு குரு கொண்டது உயிர்
- உயிர் ஆறு கொண்டது ஷனிகம்,
- 12 ஷனிகம் கொண்டது வினாடி,
- 60 வினாடி (விநாழி) ஒரு நாழிகை

இப்படி கால அளவை மிக தெளிவாக ஒரு பாடல் சொல்கின்றது.

அடுத்த பாடல் சந்திரனின் தொலைவை இந்துக்கள் அறிந்திருந்ததை சொல்கின்றது

"மண்ணளவை மாற்றியது
வண்கதிர்கள் வானளவாம்
எண்ணளவாய் கொண்டோர்
இம்பியே எண்ணின்
பெருக்கவே ஏழ்கடலின் மற்றவை
யொன்றின்
பெருக்கமே ஏழ்கடலின் பீடு"

இது கொஞ்சம் நுணுக்கமானது அதாவது பூமியின் விட்டத்தை 108 மடங்கு பெருக்கினால் சூரியனின் தொலைவு வரும், நிலாவின் விட்டத்தை 108 மடங்கு பெருக்கினால் பூமிக்கும் நிலவுக்குமான தொலைவு வரும்/

இதே தொலைவுதான் ஏழு கடலுக்கும் பூமிக்கு

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
.com




மான தொலைவை கணிக்கும் முறை என்கின்றது பாடல், கோள்களின் விட்டத்துக்கும் அவை சுற்றும் கோளுக்குமான தொடர்பு 108 மடங்கு இருப்பது போல் ஏழ்கடல் என சொல்லபடும் ஏழு பிரபஞ்சத்துக்குமான தொலைவுக்கும் பொருந்தி வருமாம்.

ஆம், பூமிக்கும் நிலாவுக்குமான தொலைவை என்றோ தெளிவாக அறிந்திருந்த ஞானம் இந்துக் களுக்கு இருந்தது இன்று விஞ்ஞானம் இதை ஆதாரத்துடன் விளக்கும் போது இந்துக்களின் பிரபஞ்ச ஞானம் எவ்வளவு மேன்மையானது என்பது புரிகின்றது

இப்படி பெரும் அறிவோடு இருந்த இனத்துக்கு பிரிட்டிஷ்காரன் வந்து கல்வி தந்தான் என்பது மடமை, நம்மிடம் இருந்துதான் ஐரோப்பா எல்லாம் பெற்றது.

சந்திரயான் 3 நிலவினை நெருங்குகின்றது, விஞ்ஞானமாக நிலவில் கால்பதிக்கும் நான்காம் நாடு இந்தியா.

ஆனால் உலக வரலாற்றில் முதன் முதலில் இந்த பிரபஞ்சத்தை முதலில் அளந்துகாட்டிய மதம் இந்துமதம்.

அவ்வகையில் மெய்ஞான வகையில் நில வினை முதலில் தொட்ட நாடு பாரதம் அந்த பெருமை வேறு எந்த இனத்திற்கும் இல்லை.

நடப்பது பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே இந்துக்கள் சொன்ன காட்சிகளின் உண்மை நிரூபணம் அன்றி வேறல்ல.

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப
**சந்தா**

**UPI மற்றும் வங்கி**
**வாயிலாகவும்**
**சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# ‘மாத்ரு தேவோ பவா’

## தாயாரின் ஆசையை நிறைவேற்ற தனது வாழ்க்கையை அர்ப்பணித்த மகன்





www.aanmeegamalar.com

‘மாத்ரு தேவோ பவா’ என்ற பழமொழிக்கு ஏற்ப கர்நாடகத்தை சேர்ந்த ஸ்ரீ. தக்ஷிணாமூர்த்தி கிருஷ்ண குமார் அவர்களை இன்றைய இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும், தன் தாயிடம் காட்டும் அதீத அர்ப்பணிப்பு பக்திக்காகவும், வேதிக் பிரசார் சன்ஸ்தான் பாராட்ட பெருமை படுகிறது!

ஸ்ரீ. தக்ஷிணாமூர்த்தி, அவர் தனது தாயார் திருமதி சுடாரத்னம்மா அவர்களின் வாழ்க்கையில் செய்த அனைத்து தியாகங்களுக்காகவும் அவருக்கு மரியாதை செலுத்த ஒரு தனித்துவமான வழியை நினைத்தார்.

வேலையை விட்டுவிட்டு, 20 ஆண்டுகளுக்கு முன்பு தனது தந்தை பரிசளித்த ஸ்கூட்டரில், 16 ஜனவரி, 2018 அன்று பயணம் மேற்கொண்டார்.

கன்னியாகுமரியில் இருந்து ஜே – கே, நேபாளம், பூட்டான், மற்றும் மியான்மர் வரை உள்ள அனைத்து கோவில்களுக்கும் தனது 73 வயது தாயுடன் 73,000 கிமீகளுக்கு மேல் பயணம் செய்துள்ளார்.

"பெற்றோர்தான் பேசும் தெய்வங்கள். அவர்கள் இருக்கும்போது அவர்களை நல்ல முறையில் பார்த்துக் கொள்ள வேண்டும்.அவ்வாறு செய்யாமல் அவர்கள் இறந்த பிறகு அவர்களின் உருவப்படத்தை வைத்து வணங்குவது சிறிதும் நல்லதல்ல. பெற்றோருக்குச் செய்யும் சேவையே உயர்ந்த சேவை, அம்மாவை நல்ல முறையில் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே நான் திருமணமும் செய்து கொள்ளவில்லை" என்றார்.

"எனக்கு கிடைத்த மகன் போல எல்லோரும் பிள்ளைகள் அமைய வேண்டும்" என சுடாரத்னம்மா தெரிவித்தார்.



எஸ்.வெங்கடேசன்

நொய்டா கடந்து செல்லும் பொழுது தக்ஷிணாமூர்த்தியும், அவரது தாயும் செக்டர் 62, ஸ்ரீ விநாயகா, ஸ்ரீ கார்த்திகேய கோவிலிக்கு வந்திருந்தார்கள். கோவில் நிர்வாகம் அவர்களுக்கு சிறப்பு மரியாதை தந்து, அவரது 'மாத்ரு சேவா சங்கல்ப' யாத்திரையை வெற்றிகரமாக முடிக்க கோவிலுக்கு வந்திருந்த பக்தர்கள் அனைவரும் வாழ்த்தினார்கள்!

**– எஸ்.வெங்கடேசன், நொய்டா**
**தொடர்பு எண்: 9811161370**

மாதம் தோறும் உ புத்தகங்கள்




e-magazine வடிவில்

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# பேரழகியாக காட்சிதரும் ராஜராஜேஸ்வரி ஆலயம்

கோயம்புத்தூர் மாநகரிலிருந்து சற்று தொலைவில், பாரதி நகரில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு அரச மரத்தடியில் ஆதி விநாயகர், மாரியம்மன் கோயில் மட்டுமே இருந்துள்ளது.

1992 ஆம் ஆண்டு இப்பகுதியில் வாழ்ந்து வந்த ஆன்மீகப் பெரியவர் ஒருவர் மக்கள் ஒவ்வொருவரின் மனம் எண்ணுவது மேலும் மேலும் சொத்து, பணம் என எதை நினைத்தாலும்இன்னமும் கொஞ்சம் வேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள்.

இந்த பேராசைமிகுந்த எதிர்பார்ப்புகள்நிறைவேறாத தருணத்தில் ஏற்படும் தடுமாற்றத்தாலும், ஏமாற்றத்தாலும் தவறுகளை செய்து துன்பத்தில் சிக்குண்டு தவிக்கிறார்கள்.

இத்தகைய நிலைகளில் சிக்காமல் பக்தர்களை முறைப்படுத்துபவள் ஸ்ரீராஜராஜேஸ்வரி.

அந்த அன்னைக்கு இங்கு கோயில் எழுப்புங்கள். மகாமேருவின் உச்சியில் சக்ர ராஜ சிம்ஹாசனேஸ்வரியாக வீற்றிருந்து லலிதா என்றும் திரிபுரசுந்தரி என்றும் கொண்டாடப்படுபவளுமான இந்த அம்பிகை இப்பகுதியை சுற்றியுள்ள மக்களின் வாழ்க்கை சிறக்க துணையிருந்து நல்லருள் புரிவாள் எனக் கூறியுள்ளார்.

மக்கள் ஒன்று கூடி ராஜராஜேஸ்வரி அம்மன், அம்மனின் இரு புறமும் விநாயகர், முருகன் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு ஆலயம் எழுப்பிட முடிவு செய்து, அதன்படியே திருப்பணிகள் நிறைவு பெற்று 1994 ஆம் ஆண்டு மிக விமரிசையாக கும்பாபிஷேக விழா நடத்தியுள்ளனர்.

தெய்வ வழிபாட்டிலும், கடவுள் மீதான பக்தியிலும் சிறந்த இப்பகுதி மக்களின் வாழ்க்கை சீரோடும், சிறப்போடும் தொடர்ந்திட பின்னர் 2005 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சிறப்பாக கும்பாபிஷேக விழா நடத்தியுள்ளனர்.

இந்த ஆலயத்தில் அருளுகின்ற தெய்வங்கள் எண்ணற்ற பக்தர்களின் இஷ்ட தெய்வங்களாக அருள்பாலித்து வருகின்றனர்.

தனித் தனி மூலஸ்தானங்களுடன் கிழக்கு நோக்கிய இந்த ஆலயத்தின் நடுவில் உள்ள சந்நிதியின் கருவறையில் பேரழகியாக ராஜராஜேஸ்வரி அம்மன் அருள்பாலிக்கின்றாள்.

இவளின் ஆலயத்தின் அர்த்த மண்டபத்தில் பலிபீடம், சிம்ம வாகனம் உள்ளது. அன்னையின் சந்நிதியின் வலதுபுறம் உள்ள சந்நிதியின் கருவறையில் பால விநாயகரும், இடதுபுறம் உள்ள சந்நிதியின் கருவறையில் பால முருகனும் அருள்பாலிக்கின்றனர்.

அன்னை பார்வதிதேவியின் பல்வேறு வடிவங்களுள் ஒன்று ராஜராஜேஸ்வரி அம்மன். வறுமைகளை நீக்கி அனைத்து ஐஸ்வரியங்களையும் அளிப்பதில் இந்த அம்பிகைக்கு நிகர் இவரே. அன்னை தன் பாலகர்களுடன் வேண்டிடும் பக்தர்களுக்கு வேண்டியவற்றை அருளும் சக்தியாக வீற்றிருக்கும் தலம் என்பது கூடுதல் சிறப்பு.

பாலமுருகன் ஆலயத்தின் இடது புறம் கேரள மாநிலத்தில் உள்ள திருக்கோயில்களின் அமைப்பில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் சந்நிதி அமைந்துள்ளது.







www.aanmeegamalar.com

ஸ்ரீ கிருஷ்ண பகவான் சந்நிதியின் மகா மண்டபத்தின் முன்புறம் பலிபீடம் அதனையடுத்து ராமர் பாதம்,கருட கம்பம் உள்ளது.அர்த்த மண்ட பத்தில் உற்சவ மூர்த்தங்களாக ஸ்ரீ கிருஷ்ண பகவான்,கற்பக விருட்சம் மற்றும் காமதேனுடன் ராதே கிருஷ்ணர் புல்லாங்குழல் இசைத்தபடி காட்சி தருகின்றனர்.கருவறையில் நின்ற நிலையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் சேவை சாதிக்கிறார்.பரிவார தெய்வமாக வடக்கு நோக்கி சிரஞ்சீவி ஆஞ் சநேயர் தனி சந்நிதியில் குடிகொண்டுள்ளார்.

ஆரம்ப காலத்தில் வழிபடப்பட்டு வந்த மாரி அன்னை தனி ஆலயத்தில் பால மாரியம்மன் என்ற திருநாமத்துடன் வடக்கு நோக்கி அருள் பாலிக்கிறார்.

இந்த அம்பிகையின் சந்நிதியின் கருவறையின் முன்பு பரிவார தெய்வமாக துர்க்கை அம்மன் குடிகொண்டுள்ளார். அரச மரத்தடியில் தனது இருபுறமும் ராகு, கேதுவுடன் ஆதி விநாயகர் அருள்பாலிக்கிறார்.

இவரின் எதிர்புறம் பலிபீடம் அதனையடுத்து மூஷிக வாகனம் உள்ளன. வெளிச் சுற்றில் நவக்கிரக தெய்வங்கள் தனி சந்நிதியில் காட்சி தருகின்றனர்.

இத்தலத்தில் மூன்று கால பூஜை மற்றும் அம்மாவாசை, பௌர்ணமி, சங்கடஹர சதுர்த்தி, திருவோணம், ஏகாதசி,கிருத்திகை ஆகிய முக்கிய விரத தினங்களில் சிறப்பு வழிபாடுகள் விமரிசையாக நடைபெறுகின்றன.

தேவார, திவ்ய பிரபந்த பஜனைகள் மற்றும் அனைத்து தெய்வங்களுக்குரிய நாட்களில் விசேஷ வழிபாடுகள் சிறப்பாக நடந்து வருகிறது. ஆனி மாதம் உத்திர நட்சத்திர நாளில் இத்தலத்தில் ஆண்டு விழாவாக கொண்டாடப்படுகிறது.

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை நாளில் மாலை ஆறு மணிக்கு ஸ்ரீ சக்கர மகாமேரு அபிஷேகம் நடைபெறுகிறது.நமக்கு வழிகாட்டும் சக்திதேவிக்கு யந்திர வடிவம் தேவை என்று மகாமேரு யந்திர வடிவை ஏற்படுத்தினார் ஆதி சங்கரர்.

ஸ்ரீசக்கர பூஜையைச் செய்பவர்கள் இந்த உலகில் மகாபாக்யங்களைப் பெற முடியும் என்கிறது ஸ்ரீவித்யா ரகஸ்யம். இப்பூஜையில் கலந்துகொண்டு ஸ்ரீசக்கரத்தை வழிபடுபவருக்கு தீமைகள் அகன்று சுகயோகங்களே சேர்ந்திடும்.




அஷ்ட ஐஸ்வர்யங்களை தந்திடும். மகாமேரு இருக்கும் இடத்தில் துர்தேவதைகள் அண்டாது, சுபிட்சம் உண்டாகும்.

தடைபட்ட காரியங்கள் நடைபெறும். காரிய வெற்றியை தந்திடக் கூடியது.நீங்களும் ஒரு வெள்ளிக்கிழமை நாளில் இத்தலம் வந்து ஸ்ரீ சக்ர மகாமேரு அபிஷேக பூஜையில் கலந்துகொண்டு அன்னையின் அருளை பெற்றிடுங்கள்.

நவராத்திரி வழிபாடு காலத்தில் அம்பிகைக்கு விசேஷ அபிஷேக,அலங்காரம் முடிந்து தீபாராதனையைத் தொடர்ந்து லலிதா சகஸ்ரநாமம்,அபிராமி அந்தாதி பாராயணம் நடைபெறுகிறது.நவராத்திரி வழிபாட்டில் ஒன்பது நாளும் ராஜராஜேஸ்வரி அம்மனுக்கு அன்ன அலங்காரம், நவதானிய அலங்காரம், சந்தனகாப்பு அலங்காரம், மீனாட்சி அலங்காரம், தனலட்சுமி அலங்காரம், சரஸ்வதி அலங்காரம், வளையல் அலங்காரம், துர்க்காதேவி அலங்காரம், திருநீறு அலங்காரம் என ஒன்பதுவிதமான அலங்காரங் களில் அருள்பாலிக்கும் அம்பிகையை காண கண்கோடி வேண்டும்.

நவராத்திரி வழிபாட்டின் போது இத்தலத்தில் முதல் மூன்று நாட்களில் துர்க்கை, அடுத்த மூன்று நாள் லட்சுமி, அதனையடுத்த மூன்று நாட்களில் சரஸ்வதி என பெண் குழந்தை களுக்கு அம்பிகை போல் அலங்கரித்துஅவர்க ளிடம் வளையல், பொட்டு, பூ, மஞ்சள் சரடு போன்றவற்றை ஒரு தட்டில் வைத்து கொடுத்து இப்பெண் குழந்தைகளை அந்த ராஜ ராஜேஸ்வரி அம்மனாகவே பாவித்து வணங்கி பூஜித்த பின்னர் அவர்களுக்கு பொங்கல் ஊட்டுகின்றனர். இப் பகுதியில் உள்ள மக்கள் பெண் குழந்தைகளை நவராத்திரி விழாவின் போது தெய்வமாக போற்றி வழிபடுவது சிறப்பு.


செ.சு.சரவணகுமார்

புரட்டாசி மாதம் ஐந்து சனிக்கிழமையும் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு அதிகாலை சிறப்புவழிபாடு ஆரம்பமாகிறது. நாம சங்கீர்த்தனையுடன் அபி ஷேக, அலங்கார பூஜை நடைபெறுகிறது. கடைசி சனிக்கிழமை நாளில் காலை ராதே கிருஷ்ணர் உற்சவராக எழுந்தருளி ஆலயத்தை சுற்றி வந்து தரிசனம் தருகிறார். ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு மார்கழி மாதம் முழுவதும் அதிகாலை நான்கு மணிக்கு சிறப்பு வழிபாடுகள் திருப்பாவை பாராயணத்துடன் துவங்குகிறது.வைகுண்ட ஏகாதசியின் போது இத்தலத்தில் பரமபத வாசல் திறக்கப்பட்டு விசேஷ வழிபாடு நடைபெறுகிறது.

பால மாரியம்மனுக்கு சித்திரை மாதம் வளர்பிறையில் பூச்சாட்டு திருவிழா ஒன்பது நாட்கள் வெகுவிமரிசையாக கொண் டாடப்படுகிறது.

திருக்கோயில் அமைவிடம்:

கோயம்புத்தூர் மாவட்டம், கணபதி சரவணம்பட்டி செல்லும் சாலையில் பாரதி நகர் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி சற்று தூரம் நடந்து சென்றால் இத்திருத்தலம் உள்ளது.

– சென்னிவீரம்பாளையம்
செ.சு.சரவணகுமார்
தொடர்புக்கு: 93458 88883.

ஆன்மிகமலர்
மெயில் புக்




இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க










aanmeegamalar.com

இணையதளத்தை

பார்க்கவும்









# விரதங்களும்
## கிழமைக்கேற்ப பலன்களும்

விரதங்களில் மிக முக்கியமாக கடைபிடிக்கப் படுவது அம்மனுக்கான விரதங்கள் ஆகும். ஒவ் வொரு நாளும் அம்மனுக்கு விரதம் இருந்து வழிபட்டு அருளைப் பெறலாம். அதன்படி எந்த கிழமைகளில் விரதம் இருந்தால் என்ன பலன் என்று பார்ப்போம்.

### கிழமைகளும் பலன்களும்

**ஞாயிற்றுக்கிழமை:**

மாங்காட்டு அம்மனுக்கு ஞாயிற்றுக்கிழமை விரதமிருந்து வழிபட்டு வந்தால் வாழ்வில் முன் னேற்றம் காணலாம். மனதில் உள்ள பயம் நீங்கி அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைக்கும். பெயர் புகழுடன் வாழ்வர்.

**திங்கட்கிழமை:**

திங்கட்கிழமைகளில் விரதமிருந்து அம்மனை வழிபட்டு வந்தால் வாழ்வில் உள்ள இடையூறுகள் நீங்கி நன்மை பெறுவர். இந்த கிழமையில் அம்மனை வழிபட்டு வந்தால் உடல்நல குறைவிலி ருந்து தப்பி நீண்ட ஆயுள் கிடைக்கும்.

**செவ்வாய்க்கிழமை:**

செவ்வாய்க்கிழமைகளில் காஞ்சி காமாட்சிக்கு விரதமிருந்து வந்தால்குடும்பத்தில் உள்ள பிரச் சனைகள் நீங்கி மங்கலம் உண் டாகும். நீண்ட காலமாக திருமணத்தடைஉள்ளவர்களுக்கு விரை வில் திருமணம் கைக்கூடும். செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் செவ்வாய்க்கிழமையில் அம்மனுக்கு விரதமிருந்து வந்தால் திருமணத்தடை நீங்கும். பில்லி, சூனியத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இந்நாளில் விரதமிருந்து பலன் அடையலாம்.

**புதன்கிழமை:**

புதன்கிழமைகளில் அம்மனை விரதமிருந்து தரிசித்து வந்தால் அறிவுக்கூர்மை பெருகும். கல்வியில் அதிக நாட்டம் உண்டாகும். கவி ஞர்கள், வணிகர்கள், ஜோதிடர்கள், கலைத் துறையில் உள்ளவர்கள் இந்த கிழமையில் பரா சக்தி அம்மனை மனமுருகி வழிபட்டு வந்தால் மேன்மை அடையலாம்.

**வியாழக்கிழமை:**

வாழ்வில் உள்ள எதிரிகளின் தொல்லைகள் நீங்கவும், உறவினர்கள் தொல்லைகள் நீங்கவும் வியாழக்கிழமைகளில் அம்மனுக்கு விரதமிருந்து வழிபட்டு வர அனைத்து தொல்லைகளும் நீங்கி சுகம் பெறுவர். பொன் பொருள் சேர்க்கை உண் டாக அம்மனுக்கு இந்நாளில் விரதமிருப்பதுசிறப்பு.

**வெள்ளிக்கிழமை:**

திருமணம் கைகூடவும், தம்பதி ஒற்றுமை பெருகவும் வெள்ளிக்கிழமைகளில் அம்மனுக்கு விரதமிருந்து வழிபடலாம். புத்திர பாக்கியம் கிடைக்கவும் இந்த நாளில் விரதமிருக்கலாம்.




வெள்ளிக்கிழமை அம்மனுக்கு உகந்த நாளாகும். இந்த நாளில் அம்மனை தரிசித்தால் வாழ்வில் எல்லா வளமும் பெறலாம்.

**சனிக்கிழமை:**

வழக்குகளில் வெற்றி பெற, விரோதிகளின் தொந்தரவு நீங்கவும் அம்மனுக்கு சனிக்கிழமை களில் விரதம் இருந்து வழிபடலாம். இந்த கிழமை யில் அம்மனை வழிபட நீண்ட ஆயுள் பெறலாம்.

அமுதா அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி, திருச்சி.
செல்: 9750333265

ஆன்மிகமலர் .காம்

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்பு எண்: 9444228203
இ-மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com



கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 170 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# ஒழுக்கம் ஒன்றே உயிரின் சுவாசம்!




அன்பையும் அஹிம்சையும் போதித்தது ஜைன மதம் பிறகு அந்த மதத்திற்கு அன்பு மதம் என்றோ அஹிம்சா தர்மம் என்றோ பெயர் வந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி வராமல் ஜைனமதம் என்ற பெயர் வர என்ன காரணம் என்று சிலர் கேட்கலாம் புத்தருடைய போதனைகளை அடிப்படையாக வைத்து உருவான பௌத்தமதம் என்பதில் கூட புத்தரின் பெயர் மருவி வருகிறது. அதே போல ஜைன மதத்தை உருவாக்கியவர் வர்த்தமான மகாவீரர் என்கிறார்கள். அவர் பெயரால் கூட அந்த மதம் அழைக்கபட்டிருகலாமே அதை விட்டு விட்டு இப்படி அழைப்பதற்கு என்ன காரணம் என்றும் பலருக்கு தோன்றும்.

ஆத்ம வெற்றி பெற்ற பல முனிவர்கள் போதித் தது ஜைன மதம் ஜைன மதத்தில் ஞானிகளை ஜீனர்கள் என்று என்று அழைக்கிறார்கள் ஜீனர்கள் மதம் என்பதே நாளாவட்டத்தில் ஜைனமதம் என்ற பெயரை பெற்றது. ஜைனமத கொள்கைகள் பலவற்றை பார்க்கும் போது அதில் பௌத்த சாயல் இருப்பது போல் தெரியும் ஆனால் உண்மையில் புத்த மதத்திற்கும் ஜைன மதத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. காரணம் பௌத்த மதம் தோன்றுவதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பே ஜைன மதம் உருவாகி விட்டது. எனவே புத்த மதம் வேண்டுமென்றால் ஜைன சாயலை பெற்றுக்கலாமே தவிர ஜைனத்தில் புத்தமத சாயல் இல்லை.

ஒவ்வொரு மனிதனும் சம்சாரம் என்ற துன்ப பெருங்கடலில் இருந்து தப்பித்து வெளியே வர வழிகாட்டிய ஜீனர்களை தீர்தங்கர்கள் என்று சிறப்பு பெயரில் அழைக்கிறார்கள். அப்படி பட்ட தீர்தங்கர்கள் இருபத்தி நான்கு பேர்

இருந்ததாகவும் அவர்களில் மூத்தவர் முதல்வர் ரிஷபதேவர் என்றும் ஜைனம் சொல்கிறது.

ரிஷப தேவரே ஜைனமதத்தின் அடிப்படையான கொள்கைகளை அஹிம்சா தர்மத்தை போதித்தவர் ஆவார். ரிஷப தேவரை பற்றி ஜைன மத நூல்கள் மட்டும் போற்றி புகழவில்லை ஜைன மதத்தின் தாயமதமான இந்துமதமும் பலபடி அவரை பாராட்டுகிறது. விஷ்ணு புராணம், பவிஷ்ய புராணம் போன்ற நூல்களில் ரிஷப தேவரை பற்றி சிறப்பான குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

இதுமட்டுமல்ல சிந்துசமவெளியில் கண்டெடுக்கப்பட்ட பல பொருட்களில்சில சாசனங்களில் ஜைனமத குறியீடுகள் இருப்பதாக பல ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். மிக குறிப்பாக டாக்டர் பிரேம்நாத் என்பவர் சிந்து வெளி சின்னத்தை நுணுக்கமாக ஆராய்ந்து ஆரியர்கள் இந்தியாவிற்குள் வருகின்ற காலத்திற்கு முன்பே அஹிம்சையை போதிக்கும் ஒரு அன்பு மார்க்கம் இருந்திருக்க வேண்டும் அதுவே பிற்காலத்தில் ஜைன கொள்கைகளாக வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும் என்கிறார்.

அவர் சொல்வதை சில காரணங்களை அடிப்படையாக கொண்டு ஏற்றுகொள்ள வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இன்றைய சில சரித்திர ஆர்வலர்கள் ஆரியர்களின் வருகைக்கு பிறகே சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்களை மக்கள் வழிபட ஆரம்பித்தார்கள் என்று தவறாக நம்புகிறார்கள்.

உண்மையை சொல்வதென்றால் வேத காலத்திற்கு முன்பிருந்தே இந்துமதம் இருந்திருக்கிறது அதை நாம் இந்த தொடரின் ஆரம்பத்திலையே சிந்தித்திருக்கிறோம் அதன் தொடர்ச்சியாக அஹிம்சா தர்மமும் மிக தொன்மை காலத்திலிருந்தே இருந்திருக்கிறது என்ற முடிவை நாம் ஏற்றுகொள்ள வேண்டும்.

தீர்தங்கர்களில் இறுதியாக வந்தவர்களே வர்த்தமான மாகாவீரர் ஆவார் இவரே ரிஷப தேவரின் ஜைன சம்பிராதயத்தை நவீனபடுத்தி மக்கள் மத்தியில் கொண்டு வந்தவர்.

அதுமட்டும் அல்ல இந்த தர்மத்தை இந்தியா முழுவதும் பரப்பிய பெருமை மகவீரரரேயே சாரும். இவரது இயற்பெயர் வர்த்தமானர் விதேக நாட்டின் தலைநகராகிய வைசாலியில் கி.மு.540 ஆம் வருடம் பிறந்தார் இவரது தந்தையார் பெயர் சித்தார்த்தர் அவர் ஒரு சிறிய நாட்டின் அரசர் இவரது தாயார் விதேக நாட்டு




சக்ரவர்த்தியின் தங்கையாகிய திரிசலை வர்த்தமானர் தமது இருபத்து எட்டாவது வயதில் தனது தாய் தந்தையரை இழந்து விட்டார். வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டு பனிரெண்டு வருடங்கள் காடு மலை வனாந்தரங்கள் என அலைந்து பல ஞானிகளை சந்தித்து கடும்தவம் செய்து இறுதியில் கேவல ஞானம் என்ற ஆத்ம விழிப்பை பெற்றார் அன்றுமுதல் அவர் மகாவீரர் என்ற சிறப்பு பெயரில் அழைக்கபடுகிறார் ஐம்புலன்களையும் வென்ற வீரர் என்பதே இதன் பொருளாகும்.

தான் வாழ்ந்த எழுபத்தி இரண்டு வருடங்கள் வரையிலும் அஹிம்சா தர்மத்தை பரப்புவதிலையே தனது வாழ்நாளை கழித்தார்.

ஜைன மதம் இந்துமத வேதங்களில் உள்ள அஹிம்சா தர்மத்தை எடுத்து தனதாக்கி கொண்டு வளர்ந்தது என்றாலும் அது இந்து மத வேதங்களை ஏற்றுக்கொள்ளவில்லை மாறாக தனக்கென்று தனியாக சில வேதங்களை உருவாக்கி கொண்டது. ஒரு ஜைனனின் நித்திய கடமை தினம்தோறும் கோவிலுக்கு சென்று தீர்தங்கரது திருவுருவ சிலையை மூன்றுதரம் வலம்வந்து மலரோ பழமோ






கொண்டு ஆராதனை செய்வது மட்டும் அல்ல தனது வாழ்நாளில் எந்த ஒரு நிமிடமும் உயிர் கொலை என்பதே செய்ய கூடாது என்பதாகும்.

வழிபாடு உபாசனை பூஜைகள் பாடல் பஜனை கள் என்பவைகள் சாதாரண ஜைனனுக்கு மட்டும் தான் காரணம் அவன் தான் ஆத்ம பரிபக்குவம் அடையாமல் சம்சார சாகரத்தில் வீழ்ந்து அவதிப்பட்டு கெ□ண்டு இருக்கிறான். அவன் மனம் பக்குவப்பட வழிபாட்டு முறைகள் என்பது மிக கண்டிப்பாக தேவை ஒரு பாத்திரத்தில் இருக்கின்ற அழுக்கை எடுப்பதற்கு எப்படி புளி வைத்து தினசரி சுத்தம் செய்ய வேண்டுமோ அதே போலவே சாதாரண மனிதனும் தனது மனதை பீடித்துள்ள மாசுகளை அகற்ற வழிபாடு செய்ய வேண்டும். ஆனால் இந்த கடமை ஜைன துறவிகளுக்கு இல்லை அவர்கள் வழிபாடும் செய்ய வேண்டாம் பூஜை புனஸ்காரம் என்று பொழுதையும் கழிக்கவேண்டாம். காரணம் நெருப்பில் விழுந்த பொன் எப்படி தங்கமாக மாறிவிட்டதோ அதே போல ஞானம் கைவரபெற்று அவர்கள் சுத்த ஆன்மாவாக மாறிவிட்டார்கள். அவர்களை மாசுக்கள் தீண்டவே தீண்டாது. அவர்களது வேலை கடையனாக கிடக்கும் மனித ஜென்மங்களை கரைதேற்ற போதனை செய்வது மட்டுமே ஆகும்.


யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

ஜைன மதத்தில் திகம்பரர், சுவேதாம்பரர் என்று இருவகை உண்டு ஜைன மத துறவிகள் யதி என்ற பெயரில் அழைக்கபடுகிறார்கள் துறவிகள் அல்லாத சாதாரண ஜைனர்களை சிராவகர் என்று அழைக்கிறார்கள். ஜைன மதம் ஆத்மா மோட்சம் ஆகிய இரண்டின் பேரிலும் நம்பிக்கையுடைய மதம் என்பதனால் மோட்ச நெறியை பற்றி மிக விரிவாக பேசுகிறது.

ஒருவன் தனது வாழ்வின் இறுதி லட்சியமான மோட்சத்தை அடையவேண்டு மானால் நல்ல பார்வை நல்ல ஞானம் நல்ல ஒழுக்கம் எனும் மூன்று ரத்தினங்களை மேற்கொள்ளுதல் வேண்டுமென்று வலியுறுத்துகிறது.

இந்த மூன்றில் ஒன்று குறைந்தாலும் வாழ்ந்து பயனில்லை என்றும் எச்சரிக்கை செய்கிறது. அதே வேளை மேற்குறிப்பிட்ட மூன்று தர்மங்களை கடைபிடிக்காமல் பக்தி மார்க்கமோ ஞான மார்க்கமோ கர்ம மார்க்கமோ தனியாக மோட்சம் பெற துணை வராது என்றும் ஜைன மதம் வலுவாகவே பேசுகிறது.

வாழ்க்கையின் அத்யாவசிய தேவையான இந்த மூன்று தர்மங்களில் முதலாவது தர்மமான நற்காட்சி என்பது புறத்தில் இருக்கின்ற பொருட்கள் அனைத்தையும் ஊன கண்கள் பார்த்து தெளிவு அடைவது போல ஞானிகள் கூறிய ஆத்ம அனுபுதிகளை மனதாலும் அனுபவத்தாலும் கண்டு தெளிவு பெற வேண்டுமென சொல்லப்படுகிறது. இரண்டாவதாக ஞானிகளின் அமுத மொழிகளில் உள்ள கருத்துக்களை ஐயம் திரிபற அறிந்துகொள்ள வேண்டும் மூன்றவதாக அவற்றை நெஞ்சார நம்ப வேண்டும் அதன்படி நடக்க வேண்டும் அப்படி நடந்தாலே நல்லொழுக்கம் கைவர பெரும் என்றும் சொல்லபடுகிறது.

நல்லொழுக்கம் என்பது அஹிம்சை வாய்மை களவு செய்யாமை பிரம்மச்சரியம் தவம் என்பதாகும். இந்த ஐந்து விரதங்களையும் ஜைன துறவிகள் மிக கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். துறவிகள் அல்லாதவர்கள் தவத்தையும் பிரம்மச்சரியத்தையும் தவிர மற்ற மூன்றையும் கடைபிடிக்க வேண்டும். அதே நேரம் கற்பையும் பொருள்களின் மீது அதீத பற்றுகொள்ளமையும் இல்லற வாசிகளின் கடமை என்றும் கூறுகிறார்கள். இவற்றை அனுவிரதம் என்று ஜைன மதம் சிறப்பித்து பேசுகிறது.

மேற்கூறப்பட்ட விரதங்களில் அஹிம்சா விரதம் என்பதே தலையாய விரதமாகும். அஹிம்சா தர்மம் என்பது இந்தியாவில் தொன்றுதொட்டு பேசப்பட்டு வந்த கருத்து என்றாலும் கூட அதை அன்றாட வாழ்க்கையில் கொண்டு வந்த பெருமை ஜைன மதத்தை மட்டுமே சாரும் என்று துணிந்து சொல்லலாம். அஹிம்சை என்பது இன்னா செய்யாமை மட்டுமல்ல பார்க்கும் உயிர்கள் அனைத்திடமும் அன்பு பாராட்ட வேண்டும் என்பதே ஆகும்.




ஒருவன் உதவி செய்ய வேண்டிய இடத்தில் செய்யாமல் கைகட்டி நின்றால் அது கூட அஹிம்சை தர்மத்திற்கு விரோதமான ஹிம்சை என்றே ஜைனர்கள் நம்புகிறார்கள்.

இந்து மதத்திலும் சரி பௌத்த மதத்திலும் சரி துறவு வாழ்கை என்பது ஒரு தனி பாதையாகவே இருந்து வருகிறது. ஆனால் ஜைன மதத்தில் துறவறம் என்பது இல்லறத்தில் இருந்து வெகு தூரத்தில் இல்லாமல் மிக அருகிலேயே இருக்கிறது. ஜைன தர்மத்தை பின்பற்றுகின்ற ஒவ்வொரு இல்லற வாசியும் தனது நெறிப்பட்ட வாழ்க்கையை மிக கண்டிப்பாக கடைபிடிக்கும் போது துறவற தர்மத்திற்குள் இயல்பாகவே நுழைந்து விடுகிறான். ஒரு ஜைனனின் வாழ்வு கனிவடைகிறது. என்று சொன்னால் அவன் துறவியாக வளர்ச்சி பெற்றிருக்கிறான் என்பதே ஆகும். சுருங்க சொன்னால் துறவிகள் மட்டுமே மோட்ச வீட்டுக்குள் நுழைய முடியும் தர்மத்தை கடைபிடிக்கும் ஒவ்வொரு இல்லற வாசியும் தன் நிலை கனிந்து மோட்சம் பெறுவான் என்பதே ஜைனத்தின் சிகரமான கோட்பாடாகும். இனி ஜைன மத தத்துவத்தை சிறிது ஆராய்ச்சி செய்வோம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

# ஆன்மீக வழியில் அமைதி


www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

ஈஸ்வரனுக்கும் ஜீவனுக்கும் இரண்டுவிதமான உறவுகள் இருக்கின்றன. ஜீவன்கள் படைக்கப்பட்ட தத்துவம். ஈஸ்வரன் நித்திய தத்துவம். ஈஸ்வரன், ஜீவன் என்ற உறவுகளை ஒரு கோணத்தில் பார்க்கும்போது ஈஸ்வரனும் ஜீவனும் இரண்டும் வேறு வேறு என்று தோன்றும். நமது ஸ்தூல சரீரம், காரண சரீரம், சூக்ம சரீரம் ஆகியவை பிரம்மத்திடமிருந்து ஆத்மாவை ஜீவன்கள் அடைந்துள்ளது. ஸ்தூல சரீரம், சூக்ம சரீரம், காரண சரீரம் ஆகியவை பிரம்மத்தின் பிரதிபிம்பமாக ஆத்மா விளங்குகிறது. அதன் அடிப்படையில் பார்க்கும்போது ஜீவனும் ஈஸ்வரனும் ஒன்று என்று வேதாந்தம் கூறுகிறது. அதாவது ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் ஐக்கிய சம்பந்தம் என்று கூறுகிறது. அதாவது ஜீவன் என்பவன் ஆத்மாவின் பிரதிபிம்பமாக இருக்கின்றான். ஜீவன் என்பவன் உணர்வு மயமாக இருப்பவன்.

ஜீவன்களாகிய நாம் ஸ்தூல சரீரத்தை 'நான்' என்ற நினைத்துக்கொண்டு நமது அனைத்து உணர்வுகளும் உலகில் இருப்பதால்தான் ஈஸ்வரன் வேறு ஜீவன் வேறு என்ற நமது அறியாமல் இயற்கையாக நமது மனதில் தோன்றி விடுகிறது. அதாவது ஜீவன் தன்னிடமுள்ள ஈஸ்வரனை தன்னிலிருந்து வேறாக தன்னையும் அறியாமல் இயல்பாகவே எண்ணிக்கொள்கிறான். இதனை ஜீவன்களாகிய நமக்கு யாரும் உணர்த்தவில்லை. அதாவது நமது ஸ்தூல சரீரத்தை 'நான்' என்று எண்ணிக்கொள்வதை பற்றி ஜீவனுக்கு யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. அதாவது இந்த ஸ்தூல உடலை 'நான் அல்ல' என்றும் அறிவுறுத்தவில்லை.

ஜீவன் என்பவன் ஆத்மாவின் பிரதிபிம்பம் என்று

70




கூறப்படுகிறது. சூரியனின் பிரதிபிம்பம் நீரில் பிரதலிப்பதுபோல் பிரம்மனின் அல்லது ஆத்மாவின் பிரதிபிம்பமாக பிரதிபலித்துக்கொண்டிருப்பது ஜீவன் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஒரே பிரம்மன்தான் இருக்கிறது. பிரம்மன் ஒரு இடத்தில் பிரதிபிம்பமாக பிரதிபலிக்கும்போது அந்த பிரம்மத்துக்கு ஜீவன் என்றும், அதே பிரம்மன் மற்றொரு இடத்தில் பிரதிபலிக்கும்போது அந்த பிரம்மத்துக்கு ஈஸ்வரன் என்றும் கூறப்படுகிறது.

பிரம்மனை ஆத்மா என்றும் கூறலாம். ஆனால் இரண்டும் ஒரு பொருளைத்தான் குறிக்கிறது. பொதுவாக நமது ஸ்தூல, சூக்ம, காரண என மூன்று சரீரங்களுக்கும் ஆதாரமாக இருப்பது ஆத்மா என்றும், மூன்று உலகங்களுக்கு ஆதாரமாக இருப்பது பிரம்மன் என்று கூறுவது வழக்கம். ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் காரண சரீரம் இருக்கிறது அல்லவா. நமது காரண சரீரங்கள் அனைத்தும் சேர்ந்தால் அது மாயை என்று சாஸ்திரம் கூறுகிறது. தனித்தனியாக உள்ள ஜீவனுடைய காரண சரீரத்திற்கு அவித்யா என்று அழைக்கப்படுகிறது. அதாவது ஒவ்வொரு ஜீவன்களுடைய காரண சரீரத்துக்கு அவிக்தியா என்று கூறப்படுகிறது. அதேபோல் ஜீவன்களில் உள்ள காரண சரீரத்தில் அடங்கியுள்ள சூக்ம சரீரத்துக்கும் அவித்யா என்று கூறப்படுகிறது. தனிப்பட்ட காரண சரீரமும் அதில் அடங்கியுள்ள சூக்ம சரீரத்துக்கு ஆத்மா பிரதிபிம்பமாக இருந்து தன்னை வெளிப்படுத்துவது ஜீவன் ஆகும்.

அனைத்து ஜீவன்களின் காரண சரீரங்கள் சேர்ந்து மாயை என்ற தத்துவம் தோன்றியது. அனைத்து காரண சரீரங்களும், அதில் அடங்கியுள்ள சூக்ம சரீரங்கள் பிரம்மன் மாயையுடன் சேர்ந்த பிரதிபிம்பத்துக்கு ஈஸ்வரன் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது அனைத்து காரண சரீரங்கள் மாயையுடன் சேர்ந்து காணப்படும் பிரதிபிம்பத்திற்கு ஈஸ்வரன் என்றும், தனிப்பட்ட காரண சரீரத்தில் உள்ள மாயையுடன் சேர்ந்துள்ள பிரதிபிம்பத்திற்கு ஜீவன் என்றும் கூறப்படுகிறது. இதனை 'எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும், நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே ! என்று தாயுமானவர் பாடல் மூலம் விளக்கியுள்ளார்.

ஜீவன்களாகிய நமது செயல்கள் எல்லாம் இறைவனை முன்னிட்டு செய்வதே கர்ம யோகம் ஆகும். நமது செயல்கள் அனைத்தும் பகவானுக்கு


எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

அர்ப்பணிப்பு உணர்வுடன் இருக்க வேண்டும். நாம் செய்யக்கூடிய செயல்களுக்குத் தக்க பலன்கள் கிடைக்கும். ஆனால் நமது செயல்களும் பயனை எதிர்பார்த்து செய்யக்கூடாது என்று கீதையில் கூறப்பட்டுள்ளது. அதாவது கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்று கீதையில் பகவான் கிருஷ்ண பராமாத்மா கூறியுள்ளார்.

ஜீவன்கள் கர்ம வாசனைகளிலிருந்து நீங்கி, தன்னோட இயல்பு வடிவான பரமாத்மாவை அடைவது பக்தியோகம் ஆகும். உலகில் காணும் அநித்தியமான பொருட்களைப் பற்றி நாம் அல்லும்பகலும் சிந்தித்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, மெய்ப்பொருளான பிரம்மம் என்னும் ஈஸ்வரனைப் பற்றி சிந்தித்துக்கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு நம் மனதை பிரம்மத்தில் நிலை நிறுத்துவதே பக்தியோகத்தின் சிறப்பாகும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஆத்மாவைத் தவிர உலகில் காணும் அனைத்தும் அனாத்மாக்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது. அனாத்மா என்றால் உள்ளும் புறமும் துன்பப்படுவது என்ற பொருள். அதாவது உடலும் மனமும் துன்பப்படுவது என்பதாகும். ஆத்மாவுடன் மாயை சேரும்போது ஈஸ்வரன் என்று அழைக்கப்படுகிறான். ஜீவன் வேறு ஈஸ்வரன் வேறு என்ற அறியாமை என்னும் துன்பம், ஜீவன்களாகிய நமக்கு எவ்வளவு காலம் இருக்கும் என்றால் ஜீவனும் ஈஸ்வரனும் ஒன்று என்ற ஞானம் மனம் பக்குவம் அடைந்து நமது மனதில் தோன்றும்வரை இருக்கும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

நமது ஸ்தூல சரீரம் பஞ்ச பூதங்களானது. சூக்ம சரீரத்தில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இந்த நான்கும் தன்னுள் அடக்கியுள்ளது. ஸ்தூல சரீரம் அழிந்து விடும் தன்மையுடையது. நமது கண்ணுக்குத் தெரியாத நமது சூக்ம சரீரம் அழிவதில்லை என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த பிரபஞ்சம் அனைத்துக்கும் காரணமாகவும், ஆதியும் அந்தமும் இல்லாததும், அழிவில்லாத நிரந்தரமாக உள்ள மகா சக்தியை பராமாத்மா அல்லது ஈஸ்வர தத்துவம் என்று கூறப்படுகிறது.

ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் உள்ள உறவைப்பற்றி அதாவது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இரண்டும் வெவ்வேறு தன்மையுடையது. ஜீவாத்மாக்கள் விருப்பு வெறுப்புகளால் சூழப்பட்டிருக்கும் வரை, தன்னுடைய ஆசைகளை பந்தபாசங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு மீண்டும்மீண்டும்



பிறப்பு இறப்பு என்னும் சம்சாரக்கடலில் வீழ்ந்து சிக்கித்தவிக்கிறது. அதாவது ஒரு பிறவியில் பூர்த்தியாகாத ஆசைகள், பேராசைகள் பந்தபாசங்கள் ஜீவன்களின் சூக்ம தேகத்தில் வாசனைகளாக சுமக்கப்பட்டு மறுபிறவியில் தொடர்கிறது என்று துவைதம் கூறுகிறது.

ஒரு ஜீவன் மாயையிலிருந்து விடுபட்டு விருப்பு வெறுப்புகளை கடந்து ஈஸ்வரனை சரணடையும்போது பராமாத்மாவாகிய ஈஸ்வரன் ஜீவன்களின் மீதுள்ள கருணையினால் ஜீவன்களை சம்சாரக் கடலிலிருந்து விடுவிக்கிறார். ஜீவாத்மா ஈஸ்வரனோடு அதாவது பரமாத்மாவோடு இரண்டறக் கலப்பதில்லை. ஆனால் ஜீவன்கள் ஈஸ்வரனின் (பராமாத்மா)அருகில் நிலையாக இருந்து ஆனந்தமாக இருக்கிறது என்பது துவைதக் கொள்கை ஆகும். இந்த துவைதக் கொள்கையின் மூலம் வேதாந்தக் கருத்துக்களின் அடிப்படையில் மத்வாச்சாரியார் வலியுறுத்தி கூறியிருக்கிறார்.

நம் உடலின் செயல்பாடுகளுக்கு ஜீவாத்மாதான் காரணமாக இருக்கிறது. அது ஸ்தூல சரீரத்திலிருந்து பிரிந்து விட்டால்

www.aanmeegamalar.com

ஸ்தூல சரீரம் அழிந்து விடும். உண்மையில் ஸ்தூல சரீரத்துக்கு ஜீவாத்மாதான் சாரமாக இருக்கிறது. அதுபோல் பராமாத்மாவின் உடல் போன்றது ஜீவாத்மா. ஜீவாத்மா இல்லாது ஸ்தூல சரீரத்துக்கு தனியிருப்பு இல்லாததுபோன்று, ஈஸ்வரன் (பராமாத்மா)இல்லாதது அனைத்து ஜீவன்களுக்கும் இருப்பில்லை. ஸ்தூல சரீரத்தில் எப்படி ஜீவன் உள்ளிருந்து இயங்கு கிறதோ, அதேபோன்று ஜீவனில் ஈஸ்வரன் (பராமாத்மா) என்பவர் அந்தர்யாமியாக இருந்து கொண்டிருக்கிறார் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஜீவன்களின் மனம்,புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் தன்மையின் காரணமாக ஜீவன்கள் தனித்தனியாக இருப்பதாக உணர்ந்தாலும், அவற்றின் உள்ளுறையும் ஈஸ்வரன் (பராமாத்மா) என்பவர் ஒருவரே. ஒரு ஜீவன் சம்சாரமென்னும் மாய வலையிலிருந்து விடுபடுவதற்கு தீவிர தாகத்துடன் இருந்து, விருப்பு வெறுப்புகளை களைந்து பராமாத்மாவை பூரணமாக சரணடையும்போது, பராமாத்மாவாகிய இறைவன் ஜீவன்களை துன்பங்களிலிருந்து விடுவிக்கிறார். இதனை விசிட்டாத்துவைதக் கொள்கையின் மூலம் வேதாந்த கருத்துக்களின் அடிப்படையில் நமக்கு முன் நிறுத்திக் கூறியவர் இராமானுஜர்.

ஜீவாத்மாவும் பராமாத்மாவும் இரண்டும் வேறு வேறு அல்ல, இரண்டும் ஒன்றே என்று அத்துவைதம் கூறுகிறது. அத்வைதம் என்றால் இரண்டற்றது என்று பொருளாகும். அதாவது மாயையின் சேர்க்கையால்தான் ஜீவன்களாகிய நமக்கு ஒன்றே பலவிதமாக தோன்றுகிறது. ஒன்றேயான பராமாத்மா மாயையின் தாக்கத்தால், அஞ்ஞானத்தின் காரணமாக தன்னை தனித்தனி ஜீவனாக மனதில் நினைத்துக்கொண்டு இருக்கிறது. அதனால் தன்னை இந்த ஸ்தூல சரீரத்தோடு சம்பந்தப்படுத்திக்கொண்டு தன்னுடைய உண்மை இயல்பான பராமாத்மாவின் நிலையை மறந்து மயங்கி விடுகிறது.

ஜீவன்களாகிய நமக்கு அஞ்ஞானம் முற்றிலும் மறைந்து மெய்ஞானம் பிறந்தால் பராமாத்மா ஒன்றே என்பது தெளிவாகும். அதுவே முக்தி நிலை ஆகும். ஜீவன் ஸ்தூல சரீரமாக உள்ளபோதே ஜீவன் முக்தனாக முடியும். அவ்வாறு முக்தி நிலை அடைந்து உயர்ந்தவனே ஞானி என்று கருதப்படுகிறான் என்று அத்வைதக் கொள்கையை வலியுறுத்தி உலகில் பரப்பியவர் சங்கராச்சாரியார். வேதாந்தத்தின் சாரமாகிய இந்த அத்வைதக் கொள்கை காலத்தால் முற்பட்டது என்று கூறப்படுகிறது. இதுபோன்று ஈஸ்வர, ஜீவ தத்துவங்களில் நமது மனம் ஆழ்ந்து ஈடுபடும் போது நம் மனதுக்குள் நம்மை அறியாமல் நாம் தேடும் விரும்பும் மன அமைதி கிடைக்கும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்


# வாக்கும் செயலும் கூடினால் உலகிற்கு நன்மை, இதை இறைவன் தான்

சீடன்: பிரம்மச்சாரியாக இருந்தால் தான் சாதகனாக முடியுமா?

ஞானி: எந்த ஆசிரமம் ஆனாலும் அதன் உண்மையை உணராமல் வாழ்பவன் கஷ்டப்படுவான்.

சீடன்: இதில் கருத்து வேற்றுமை வருமா?

ஞானி: வராது. வல்லவனுக்கு வல்லவன் என்ற சண்டை வரும். பக்தனுக்கு பக்தன் என்ற சண்டை கிடையாது.

சீடன்: உலக வாழ்க்கை முக்கியமில்லையா?

ஞானி: இது பொருள் உலகம் என்பதால் உலக முக்கியத்துவத்தைப் பற்றி எல்லோரும் தான் சொல்கிறார்கள். பொருள்கள் மத்தியில் இருக்கும் பரம்பொருளை உணர்ந்தால் வாழ்க்கை இனிக்கும்.

சீடன்: அப்படியனால் கிருகஸ்தாஸ்ரமும் முக் கியமானதுதானே?

ஞானி: ஒவ்வொரு ஆசிரமத்திலும் ஒரு பொருள் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த பொருள் இல்லாத வரை அந்த ஆசிரமம் சிறக்காது. அந்த பொருளை உணர்ந்து அமைதி அடைய வேண்டும்.

சீடன்: படிப்பு மிகவும் அவசியமல்லவா?

ஞானி: படிக்க மட்டும் செய் யாதே. பார்க்கவும் செய்.

சீடன்: எது பாபம்?

ஞானி: வளர்ந்த மூளையை வைத்துக் கொண்டு அறிவை வளர்த்துக் கொள்ளாதது.

சீடன்: இன்றைய சமுதாயம் எப்படி உள்ளது?

ஞானி: எந்த சமுதயாத்தையும் நல்லது அல்லது கெட்டது என்று சொல்ல முடியாது. வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

சீடன்: பக்தனாகி தீர வேண்டுமா?

ஞானி: அவசியமில்லை. ஆனால், நீ உண்மையைத் தெரிந்து கொள்ள முயற்சிக்கிறாயா என்பது அவசியம்.

சீடன்: குரு என்பவர் யார்?

ஞானி: யார் வார்த்தையைக் கேட்டு உன் புத்தி நழுவாமல் இருக்கிறதோ அவரே உன் குரு.

சீடன்: கடவுள் ஆராய்ச்சி செய்யலாமா?

ஞானி: எதையும் ஆராயலாம். கவலைதான் படக் கூடாது.

சீடன்: எது பக்தி?

ஞானி: வீடும், சோறும், துணியும் இறைவன் தந்தது என்று உணர்ந்தால் பக்தி.

சீடன்: உணராதவரை?

ஞானி: உதாரணங்கள் தேவை.

சீடன்: உலகில் எது நல்லது?

ஞானி: வாக்கும் செயலும் கூடினால் நல்லது. இறைவன் தான் இதைச் செய்கிறான்.



சீடன்: நவராத்திரியில் புதுமைஎன்ன?

ஞானி:ஆதியில் நிலைத்த சக்திக்கு ஆண் என்றும் இயங்கும் சக்திக்கு பெண் என்றும் பிரிந்தார்கள். ஆண்களுக்கு இந்த ஐக்கியபாவம் வர வேண்டும் என்பதற்காக வந்தது நவராத்திரி.

சீடன்: மத அடிப்படைகளை வலியுறுத்துவது ஏன்?

www.aanmeegamalar.com




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203


ஞானி: நம்பிக்கை ஏற்படுத்த.

சீடன்: அதன் பலன் என்ன?

ஞானி: நம்பினவனிடம் ஒரு இயக்கம் உருவாகிறது.

சீடன்: அடிப்படை தத்துவத்தால் கலகம் விளைகிறதே?

ஞானி: வெறும் அறிவுபூர்வமாக அதை அணுகுவதால்.

சீடன்: விஞ்ஞானத்தில் இதன் நிலை என்ன?

ஞானி: பஞ்ச பூதங்கள் தான் விஞ்ஞானத்தின் அடிப்படை.

சீடன்: மகிழ்ச்சி எப்பொழுது கிடைக்கிறது?

ஞானி: சிந்தனையை லட்சியமாகக் கொண்டால்.

சீடன்: மதத்தில் பலவித முறைகள் இருக்கிறதே?

ஞானி: முறைகள் அனுபவமாக இருந்தால் நல்லது.

சீடன்: உபதேசம் வெற்றியடைவது எப்பொழுது?

ஞானி: அறிவைக் கொடுக்காமல் மனதைக் கொடுக்கும்போது.

சீடன்: ஏன் அந்தத் தன்மை ஏற்படுவதில்லை?

ஞானி: செயல்படாமல் எண்ணுவது மனித இயற்கை.

சீடன்: சாதகன் எப்படி இருக்க வேண்டும்?

ஞானி: எண்ணும்போதே செயல்படுவான். அதுதான் வளர்ச்சி.

சீடன்: துன்பம் எப்பொழுது தெரிகிறது?

ஞானி: கடவுளின் நிழல் கிடைக்காதபொழுது..

சீடன்: பக்தன் ஆவது எப்பொழுது?

ஞானி: நம்மை நாமே சோதித்துக் கொள்ளும்போது.

சீடன்: வர்க்கங்கள் தோன்றியது எப்பொழுது?

ஞானி: பாசம் நம் அறிவை தடுக்கும்போது.

சீடன்: கடவுள் மகிழ்வது எப்பொழுது?

ஞானி: மனிதனுக்கு மனிதன் தொண்டு செய்யும்போது.

சீடன்: திருவிழாக்கள் எதற்கு உபயோகம்?

ஞானி: மனிதனின் கவலையை நீக்க ஒரு வாய்ப்பு பக்தர்கள் வாழ்வு முழுதும் கொண்டாட்ட திருவிழாதான்.

சீடன்: கொண்டாட்டங்களை எப்படி அணுகுவது?

ஞானி: அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள். அதுவே தவமாகிறது.

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# இராமனை வணங்கி கருடனின் பாதத்தை தொட்டு வணங்கினால்

# குழந்தை பாக்கியம், திருமணவரன் அருளும் ஸ்தலம்




இரகுகுலநாத ஸ்ரீ இராமபிரான் வடதேசமான அயோத்தியாவில் பிறந்தாலும், அவருக்கு அதிக ஆலயங்கள் இருப்பது என்னவோ தென்னகத்தில்தான். அப்படியான ஓர் இராமர் திருத்தலம்தான் இரகுநாதசமுத்திரம்.

ஸ்ரீ இராமர் இராவணனை அழித்து, சீதையை மீட்டு, தம்பி லக்ஷ்மணரோடு இப்பகுதியில் வரும்போது, சுகப்பிரம்ம ரிஷியை சந்திக்கின்றார். அவரிடமிருந்து வேதங்களின் உட்பொருள் அடங்கிய ஓலைச்சுவடியைப் பெற்று, அனுமனை வாசிக்கச் சொல்கின்றார்.

வேதத்தின் உட்பொருளைக் கேட்டு இன்புற்ற தசரத புத்திரர் அனுமனுக்கு உபநிஷதங் களில் ஒன்றான முக்திகோபநிஷத்தை உபதேசிக்கின்









றார். இந்தத் திருக்கோளத்தை நாம் இந்த இரகுநாதசமுத்திரத்தில் தரிசனம் செய்யலாம்.

இத்தலத்தின் இராமபிரான் யோகநிலையில் அமர்ந்தவண்ணம் அருள்பாளிப்பவர். இவரைப் போன்று இந்த ஆலயத்தோடு சேர்த்து, படை வீடு மற்றும் நெடுங்குணம் ஆகிய மூன்று திருத் தலங்களிலும் ஸ்ரீ யோக இராமரை தரிசிக்கலாம். இந்த மூன்று ஆலய சிறப்பத்தையும் ஒரே மன்னனால், ஒரே நேரத்தில் வடிக்கப்பட்டது என்பதுதான் சிறப்பிலும் சிறப்பு.

அந்த சிறப்புக்குரிய நாயகன் இரண்டாம் நரசிம்மவர்ம பல்லவன் தான். பல கற்கோவில் களை எழுப்பிய இம்மன்னனின் மகனே புகழ் பெற்ற குடைவரைக் கோயில்களை எழுப்பிய மகேந்திரவர்ம பல்லவன் ஆவான்.



மோ.கணேஷ்

நரசிம்மவர்மப் பல்லவனால் இக்கோவில் கட்டப்பெற்றது என்பதற் குச் சான்றாக பல்லவர் கட்டடக்கலை பல இடங்களில் பிரதிபலிக்கின்றது. விசித்திர சித்தன் என்று போற்றப்பட்ட நரசிம்மப் பல்லவனின் கல்வெட்டுகளும் இங்கு பல இடங் களில் காணப்படுகின்றன.

நாயக்க மன்னர்கள் ஆட்சி செய்யும் காலத் தில் இப்பகுதியை ஆண்ட இரகுநாத நாயக்கன் என்னும் அரசன் இந்த ஊரில் மிகப் பெரிய ஏரி ஒன்றை ஏற்படுத்தினான்.




இந்த ஏரியினால் சுற்றியுள்ள பல கிராமங்களின் நீர் பஞ்சம் தீர்ந்தது.

இந்த ஏரி சமுத்திரம் போல் (கடல் போல்) காட்சியளித்தது. இதனால் இவ்வூருக்கு இரகுநாதசமுத்திரம் என்று பெயர் வந்ததாக கூறுகின்றனர் இவ்வூர் மக்கள். அதோடு, இங்கு போர்படை வீரர்கள் பலர் தங்கியுள்ளனர். ஸ்ரீ இராமரது திருக்கோவில் இங்கு இருந்ததாலும் இவ்வூருக்கு இரகுநாதசமுத்திரம் என்கிற பெயர் வந்ததாகவும் பல்வேறு காரணங்களை எடுத்துக் கூறுகின்றனர்.

காஞ்சிபுரம் நிகமாந்த வேதாந்த தேசிகர் இத்தலத்தினில் ஒரு மண்டலம் தங்கி ஸ்ரீ இராமரை சேவித்து, பக்தர்களுக்கு பல அருள் விஷயங்களைக் கூறி, ஆசி வழங்கியுள்ளார்.

ஊரின் தென்மேற்கு பகுதியில் ஆலயம் அழகுடன் அமைந்துள்ளது. கிழக்குப்புற நுழை வாயில் வழியாக உள்ளே சென்றால்...மேற்கு நோக்கியபடி ஸ்ரீ கருடாழ்வார் தரிசனம்.

முதலில் நீண்டதொரு முக மண்டபம். அதன் வடபாகத்தில் பழமையான அனுமன். பின் மகா மண்டபம்.அதன் வலப்புறம் ஆழ்வார்களின் தரிசனம். இங்கேயும் ஒரு அனுமன் சிலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கருவறையுள் பேரருடன் நடுநாயகமாய் ஸ்ரீ இராமச்சந்திரப்பிரபு யோகாசனமிட்டு அமர்ந்தவண்ணம் தனது வலது கரத்தை சின்முத்திரையாகக் கொண்டு, ஆத்ம ஸ்தானத் தில் வைத்தபடி கருணாகரசம் பொழியும் திருமுகத்துடன் வீற்றருள... வில்லேந்திய கோலத்தில் தம்பி லட்சுமணர் இடதுபக்கம் நின்றருள, தாய் சீதாப்பிராட்டியாரோ வலதுபக்கம் அமர்ந்து திருவருள் பொழிய, தேஜோமயமாய் திகழ்கின்றனர் தசரத குடும்பத்தினர்.

எதிரே ஈசான மூலையில் ஸ்ரீ ஆஞ் சநேயர் சுகப்பிரம்மரிஷி தந்த ஓலைச்சுவடியை பத்மாசனத்தில் அமர்ந்தபடி வாசித் துக் கொண்டிருக்கின்றார். இந்த வினோதமான அமைப்பினைஇங்கும், படைவீடு மற்றும் நெடுங்குணம் ஆகிய இம்மூன்று திருத்தலங்களில் மட்டுமே தரிசித்து பரவசம் அடைந் திட முடியும் பக்தர்கள்.

இதில் இந்த இரகுநாதசமுத்திரத் தில் மட்டும் ஸ்ரீ இராமபிரானுக்கு வலதுபுறம் மாறியபடி சீதாதேவியும், இடதுபுறத்தில் ஸ்ரீ லட்சுமணரும் திருக்காட்சித் தருவது சிறப்பம்ச மாகும். உற்சவ மூர்த்தமாக ஸ்ரீதேவி பூதேவி உடன் ஸ்ரீ வரதராஜ பெருமாள் எழுந்தருள்கின்றார். ஸ்ரீ பத்மாசனித் தாயாருக்கும் இங்கு உற்சவத் திருமேனியுள்ளது.

ஆலய வலம் வருகையில் ஸ்ரீ பத்மாசனித் தாயாரின் தனிச்சன்னிதி தென்புறமுள்ளது. இங்கு கருவறையில் இரண்டு தாயார்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளனர். வடமேற்கில் ஸ்ரீ நாகர் சிலையும், அருகே வேப்ப மரமும் உள்ளன.

வடதிசையில் தென்முகமாக ஸ்ரீ யாக்ஞவல்கிய மகரிஷி தனியே சன்னிதி கொண்டருகின்றார். இவர் ஆஞ்சநேயரின் குருவான ஸ்ரீ சூரியனது குருவாவார்.

பாஞ்சராதர ஆகம முறைப்படி தினமும் பூஜைகள் நடக்கின்றன. 2009 ஆம் ஆண்டு இவ்வாலய சம்ப்ரோக்ஷணம் நடைபெற்றுள்ளது. வருடாவருடம் ஸ்ரீ இராமநவமியன்று இங்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெறுகின்றன.

மூன்று வாரங்கள் இங்கு ஸ்ரீ இராமரை சேவித்து, கோரிக்கைகளைச் சொல்லி, கருட னின் பாதங்களை தொட்டு வணங்கினால், திருமண வரம் மற்றும் குழந்தை வரும் கிட்டும் என்கின்றார் இவ்வாலய பட்டச்சாரியார். ஸ்ரீ இராமருக்கு திருமஞ்சனம் செய்து, 11 சுமங்கலிகளுக்கு புடவை மற்றும் மங்களப் பொருட்களை தானம் தந்து, வேப்பமரத்தில் தொட்டில் கட்டிச்செல்ல... ஆண் குழந்தை பெறுவது கண்கூடு.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் உள்ள இவ்வூர், சேத்பட் பெரண மல்லூர் சாலையில் சேத்பட்டிலிருந்து 14 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

ஆலயத் தொடர்புக்கு: திரு பார்த்தசாரதி பட்டாச்சாரியார் போன்: 9894008630

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179


www.aanmeegamalar.com

# கோபுரம் சன்னதியை ஏற்காத அம்மன்
## திறந்தவெளியில் மரம், செடி, கொடியை பந்தலாக கொண்டு ஊரை காக்கும்
# காட்டு செல்லியம்மன்

திருவள்ளூர் மாவட்டத்தில், பெரியபாளையம் பவானிஅம்மன் கோவிலிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் செங்கரை என்ற கிராமத்தில் இயற்கை சூழ அமைந்துள்ளது காட்டு செல்லியம்மன் கோவில். இறைவனை இயற்கையுடன் ஒருசேர வணங்கவேண்டும் என்ற தத்துவத்தை பிரதிபலிப்பதாக இந்த செல்லியம்மன் கோவில் காட்சி தருகிறது.

இந்த அம்மன் சன்னதியில் விமானம் கிடையாது, வெறும் வேதைக்கொடியே பந்தலாக கொண்டு அம்மன் வீற்றிருக்கும் இடம் முழுவதும் பிரம்மாண்ட பந்தலாக பரவியுள்ளது.

இந்த வேதைக் கொடி பந்தலின் கீழே அம்மன் இயற்கை கொஞ்சும் வகையில் புற்றில் வீற்றிருந்து பக்தர்களுக்கு காட்சி தருகிறாள்.

இந்த அம்மனைப் பற்றி சுவாரஸ்யமான ஒருசில வரலாறுகள் இங்குள்ள மக்களால் கூறப்படுகிறது.

அந்த வகையில் இந்த அம்மன் தோன்றிய வரலாறு....

பெண்கள் பிற ஆடவரைத் தீண்ட மாட்டார்கள் என்பதால் தன்னை வென்று அழிப்பதானால் அது





www.aanmeegamalar.com

ஒரு பெண்ணால்தான் நடைபெற வேண்டும் என்று தாருகாசுரன் வரம் பெற்றிருந்தான். தேவர்களுக்கும் மக்களுக்கும் கடும் துன்பம் தந்துகொண்டிருந்தான். அவனைக் கொல்ல சிவன், சக்திக்குக் கட்டளையிட்டார். சக்தியின் கண்ணிலிருந்து நஞ்சை, விடக் கொடிய ஒரு விஷ சக்தி தோன்றியது. அந்தச் சக்தியின் கோபாக்னியில் தாருகன் எரிந்து சாம்பலானான்.

அந்தக் கோப சக்தி ஒரு குழந்தையாக உருவெடுத்தது. அந்தக் குழந்தைக்கு மேலும் மேலும் விஷம் கலந்த பாலை ஊட்டி மேலும் விஷ சக்தி நிறைந்ததாக உருவாக்கினாள் கோபாவேசத்தில் இருந்த சக்தி.

எதிர் நாளில் அந்தக் குழந்தை கொடூரமான தாக இருக்கும் என்பதால் சிவன் அந்த விஷக் குழந்தையையும் அதன் பாலையும் தன்னுள்ளேயே ஒடுக்கிக் கொண்டார். கோப சக்தியின் விஷக் குழந்தை ஒடுக்கப்பட்டதால் சக்தி மூர்க்கம் கொண்டு ஆடி குதித்து ஆங்காரத்துடன் கோர தாண்டவம் ஆடினாள். சிவபெருமான் அவளது ஆட்டத்தை அடக்க எண்ணித் தன்னுடன் நாட்டியமாடப் போட்டிக்கு அழைத்தார்.

இருவரும் வெகு நேரம் சளைக்காமல் ஆட, நடுவில் தன் காதினை அலங்கரித்துக் கொண்டிருந்த தோடினை அவிழ்ந்து விழச் செய்து, மீண்டும் ஆட்டத்தின் நடுவே தன் காலால் எடுத்துப் பொருத்திக்கொண்டார். அதனையும் ஆட்டத்தின் அங்கமாகவேக் கருதிய அந்த உக்ர கோப சக்தி அவ்வாறு ஆடுவது சாத்தியம் இல்லை என நின்றாள். அந்நேரத்தில் சண்டி, சிவனுடன் ஆடிய அந்த 'சண்ட தாண்டவம்' என்னும் போட்டியில் தோற்றதாகக் கருதினாள்.

சண்ட தாண்டவத்தில் தோற்ற அன்னை காளி, தன்னால் உருவாகி சிவனின் உடலில் அடங்கிய குழந்தையின் அழுகுரல் தொடர்ந்து கேட்பதை உணர்ந்தாள், காதைப் பொத்திக்கொண்ட போதும் குழந்தையின் அழுகுரல் ஒலிப்பதாக உணர்ந்தாள்.

சிவபெருமானின் இந்தச் செயலால் ஆத்திர மடைந்த காளிதேவி, சிவபெருமான் மீது கோபம்கொண்டு சோகமான மனநிலையுடன் அமைதியைத் தேடி திரிந்தாள்.

அவளின் தேடுதலுக்கு ஏற்ப ஒரு இடத்தை தேர்வு செய்தாள். அந்த இடம்தான் தற்போதைய கும்மிடிப்பூண்டி நகருக்கு அருகில் உள்ள செங்கரை என்ற கிராமத்திற்கு அருகில் உள்ளது.

இந்த இடம் முழுவதும் இயற்கை சூழ காட்டு மரங்கள், செடி கொடிகள், என்று மிக ரம்மியமாகவும் மனித நடமாட்டம் இல்லாத







காட்டுப்பகுதியாக இருந்ததது. அங்குள்ள அடர்ந்த காட்டில் மரங்களின் நிழலில் காளிதேவி வாழத் தொடங்கினார். பூஜை மற்றும் தவத்தில் ஆழ்ந்து தனது உருவத்தை எறும்பு புற்றுக்குள் மறைத்துக் கொண்டாள்.

இவ்வாறு தோன்றியதுதான் காட்டு செல்லியம்மன் வரலாறு.

நீண்ட காலம் இவ்வாறு காட்டு வாசம் செய்து வந்த காளிதேவி, தான் இங்கு உள்ளதை மக்களுக்கு அறிவிக்க ஒருசில திருவிளையாடல்களையும் நிகழ்த்தியுள்ளாள்.

இந்த அம்மன் நிகழ்த்திய திருவிளையாடல் மிகவும் சுவாரஸ்யமானதாகவும் உள்ளது.

ஒருமுறை ஆங்கிலேய வீரர்கள் காட்டில் ஒரு மானை துரத்திக் கொண்டிருந்தனர். அது காட்டில் ஒரு புதரில் போய் ஒளிந்து கொண்டது. வீரர்கள் புதரைச் சுத்தப்படுத்த முயன்றனர், ஆனால் அவர்கள் அங்கு ஒரு கருப்பு நாகப்பாம்பு ஒன்றை எதிர்கொண்டனர்.

அது அருகில் உள்ள எறும்புப் புற்றில் மறைந்திருந்தது. வீரர்கள் எறும்புப் புற்றை உடைக்கத் தொடங்கினர், அங்கு தேவியின் சிலை இருப்பதைக் கண்டனர்.

அங்கு கூடியிருந்த ஒரு பெண்மீது அம்மன் தோன்றி அருள்வாக்கு கூறினாள்

தான் செல்லியம்மன் என்றும், தனக்கு குழந் தைகளின் அழுகையும் பூச்சிகளின் மெல்லிய ரிங்கார சப்தமும் ஒவ்வாமையாக இருப்பதால் புற்றுக்குள் மறைந்திருப்பதாக கூறி மறைந்தாள்.

அமைதியை நாடிய அம்மனை மக்கள் தொந்தரவு செய்யாமல் அங்கேயே வைத்து பூஜை செய்து வழிபட்டனர் என்று ஒரு நிகழ்வை

கோபும் மற்றும் மண்டபம் ஏதும் இல்லாமல், அம்மன் சன்னதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் அம்மனுக்கு நிழல் தருவதைப் போன்று பந்தலாக படர்ந்துள்ள வேதை கொடி.






வேதை கொடி பந்தலாக
படர்ந்துள்ள அம்மன் சன்னதி.

குறிப்பிடுகின்றனர்.

இன்னொரு சம்பவத்தையும் இந்த அம்மனுடன் இணைத்து கூறப்படுகிறது.

காட்டில் வேட்டையாடி பொழுதை கழித்த ஒரு ஆங்கிலேய கேப்டன், செல்லியம்மன் குடியிருந்த புற்றிற்கு அருகில் தங்க நேர்ந்தது.

மாலை நேரமானதும் தான் முகாமிட்டிருந்த இடத்திற்கு அருகில், அடர்ந்த காட்டுப்பகுதியின் புதரிலிருந்து, இரவு நேரத்தில் கண்களை கூசும் அளவிற்கு பிரகாசமான வெளிச்சம் வெளிப்பட்டதை கண்டார்.

அடுத்த நாள் காலையில் அந்த கிராமத் தலைவரிடம் இதுபற்றி விசாரித்தபோது, அந்த கிராமத்து தலைவர், அங்கே ஒரு தேவி வாசம் செய்வதாகச் சொன்னார். இதை நம்பாத அந்த ஆங்கிலேய கேப்டன் அன்றிரவு ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தபோது கணுக்கால் சத்தமும், கற்பூரம் எரியும் வாசனையையும் உணர்ந்தார்.

இதனால் பதற்றமடைந்த கேப்டன் தனது கூடாரத்தை விட்டு வெளியே வந்தார். சிறிது நேரம் கழித்து அவர் தனது கூடாரத்திற்குள் நுழைய முயன்றபோது ஒரு கருப்பு நாகப்பாம்பு அவரைத் தாக்க வந்தது,

இதனால் பயமும் பதற்றமும் அடைந்த அந்த கேப்டனை கண்ணுக்குத் தெரியாத சில சக்தி நாகப்பாம்பின் தலையில் மோதியது, அந்த இடத்திலேயே அந்தப் பாம்பு இறந்தது, அடுத்த நாள் தனக்கு ஏற்பட்ட அனுபத்தை கிராம

## நவீன விஞ்ஞானத்தை வெறுக்கும் அம்மன்

எவ்வளவோ முயன்றும் இந்த அம்மனுக்கு கோபுரத்துடன் கூடிய சன்னதியை அமைக்க முடியவில்லை, பக்தர்களின் தொடர் முயற்சியால் சன்னதி அமைக்கும் ஒரு உத்தரவையும் அம்மன் தெரிவித்ததாக ஊர் மக்கள் கூறுகின்றனர்.

அந்த உத்தரவுப்படி சன்னதி அமைக்க விரும்பினால் ஒரே நாளில் தான் குடியிருக்கும் சன்னதியை அமைக்க முடிந்தால், தான் ஏற்றுக் கொள்வதாக கடினமான ஒரு கட்டளையை அருள்வாக்கு மூலம் தெரிவித்ததாகவும், ஆனால் எவ்வளவு முயன்றும் அம்மன் கூறியபடி ஒரே நாளில் சன்னதி அமைக்க முடியாததால், சன்னதி கட்டும் முயற்சியை கைவிட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

என்னதான் நவீன விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தாலும், அம்மன் கூறியபடி ஒரே நாளில் சன்னதி அமைக்கும் அளவிற்கு மனித விஞ்ஞானம் வளரவில்லை என்பதை உணர்ந்து, விஞ்ஞானத்திற்கு சவால் விடும் வகையில் அம்பாள் உத்தரவு அமைந்ததாகவும் ஊர் பொது மக்கள் கருதுகின்றனர். இயற்கையே போதும் என்பதால் நவீன விஞ்ஞானத்தை அம்பாள் வெறுப்பதாகவும் கூறப்படுகிறது.




சன்னதி மற்றும் சுற்றுப்புறத்தில் படர்ந்துள்ள வேதை கொடி

மக்களிடம் கூறினார். காட்டுச் செல்லியம்மன் தான் காப்பாற்றியதாகக் கூறி ஆங்கிலேய கேப்டனை அம்மன் வீற்றிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அடர்ந்த காட்டில் அம்மனுக்கு பொங்கல் படைத்து வழிபட்டனர், ஆனால் கேப்டனால் அந்த அம்மனை நம்பவில்லை, சிறிது நேரத்தில் அந்த இடத்திலிருந்து செல்ல முற்பட்டபோது, ஒரு புதரில் தடுமாறி விழுந்து, உடலில் முட்கள், கற்கள் குத்தப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் குற்றுயிரும் குலைஉயிருமாக கிடத்தப்பட்டார்.

இவரின் நிலையை கண்ட மக்கள் கோவில் புனித நீரை அவர் முகத்தில் தெளித்து, கோவிலில் இருந்து கொண்டு வந்த எலுமிச்சை பழத்தை கையில் வைத்து அம்மனுக்கு படைத்த பொங்கல் பிரசாதத்தை அவரது வாயில் ஊட்டிவிட்டனர்.

உயிர் போகும் அளவிற்கு உடல்நிலையில் மோசமாக இருந்த கேப்டனின் உடலில் அம்மனின் பிரசாதம் பட்டதும், விரைந்து குணமாகி அடுத்த நாளே எழுந்து நடக்கும் அளவிற்கு மாற்றம் ஏற்பட்டது. தன் நிலையை உணர்ந்த ஆங்கிலேய கேப்டன் அன்றே அம்மனிடம் சரணடைந்து தனது சந்தேக புத்திக்காக மன்னிப்பு கேட்டதாகவும் கூறப்படுகிறது..

இவ்வாறு காட்டுச் செல்லியம்மனின் புகழ்

## குருஸ்தலமா...?

பொதுவாக வியாழக்கிழமை குரு பகவானுக்கு விஷேச தினமாக கொண்டாடு வார்கள், வியாழக்கிழமை குருபலன் தரும் தட்ஷிணாமூர்த்தி, நவகிரக சன்னதியில் வீற்றிருக்கும் குரு போன்ற அறிவை போதிக்கும் சக்திகளுக்கு முக்கியத்துவம் தரப்படும், அந்த வகையில்தான் ராகவேந்திரர், சாய்பாபா. காஞ்சி சங்கராச்சாரியார், போன்ற குருநாதர்களுக்கும் உரிய நாளாக போற்றப் படுகிறது, அந்த வகையில் இந்திய அளவில் வியாழக்கிழமையை உகந்த தினமாககொண்ட ஒரே அம்மன் சன்னதி இந்த காட்டு செல்லியம்மன் மட்டுமே, இதனால் இந்த சன்னதி குரு சன்னதிக்கு இணையாக போற்றுதலுக்குரியதாக விளங்குகிறது.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

பல கிராமங்களில் பரவியதால் ஊர் மக்கள் ஒன்று கூடி அம்மனுக்கு ஒரு கோவில் கட்ட வேண்டும், அதற்கு அம்மனை அடர்ந்த காட்டிலிருந்து மீட்டு ஊரின் நடுவில் கோவில் அமைத்து பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று முடிவு செய்தனர்.

இதுகுறித்து அம்மனிடம் குறிகேட்டபோது, ஒரு பெண்மணி மூலம் பதில் தந்த அம்மன், தனக்கு சத்தமும், குழந்தைகளின் அழுகையும் ஒவ்வாமையாக இருப்பதால் இந்த இடத்திலேயே இயற்கை சூழலிலேயே தங்க விருப்பதாக கூறினாள்.

ஆனாலும் பக்தர்கள் தொடர்ந்து, அம்பாளை ஆலங்குளம் என்ற பகுதி அமைதியான சூழலில் அமைந்து உள்ளதாகவும், அங்கு அம்பாளுக்கு கோவில் கட்டுவதாகவும் கூறினர்.

ஊர் கூடி முடிவெடுத்ததை கூறி அம்மனிடம் உத்தரவு கேட்டனர். காட்டை விட்டு வர விருப்பமில்லாத அம்பாள், ஒரு சிறுமியின் மீது அருளாக வந்து இறங்கினாள்...

தான் ஊருக்குள் குழந்தைகள் அழும் குரலோ, சண்ட தாண்டவத்தின்போது சிவன் கால் பதியும்போது ஏற்பட்ட உலக்கை இடிக்கும் சத்தமோ கேட்கக் கூடாது எனவும் கூறினாள். அதுமட்டுமல்லாமல் தான் ஊருக்கு வந்து சேரும் இடம் வரை ஒவ்வோர் அடிக்கும் ஒரு காவு தர வேண்டும் எனவும் சாத்தியமில்லாத நிபந்தனைகளை விதித்தாள்.

அம்பாளை எப்படியாவது ஊருக்குள் அழைத்து வரவேண்டும் என நினைத்த ஊர் மக்கள் அம்பாளின் உத்தரவை நிறைவேற்றுவதாக கூறி மிகப்பெரிய அளவில் அம்பாளை ஊருக்கு அழைக்கும் நிகழ்வு நடைபெற்றது.

ஆனால் எவ்வளவு முயற்சி செய்தும், அம்மன் வீற்றிருக்கும் காட்டுக்கு அருகில் உள்ள ஆலங்குளம்வரை மட்டுமே காவு கொடுத்து அழைத்துச் செல்ல முடிந்தது.

அடுத்த அடிக்கு காவு கொடுக்க ஊர்மக்களால் முடியவில்லை, உடனே அம்மன் மீண்டும் காட்டுக்குத் திரும்பி வேதைக்கொடி பந்தலின் கீழேயே அமர்ந்துவிட்டாள்.

அம்மனின் விருப்பம் அதுதான் என்பதை அறிந்து கொண்ட ஊர் மக்கள் அம்பாளை அந்த இடத்திலேயே வழிபடத் துவங்கினர்.



கீதா ராஜன்

காட்டுக்குள் அம்பாள் வசித்தாலும், மாலை 6 மணிக்கு மேல் ஊரை காப்பதற்காக காட்டிலிருந்து வெளியேறிவிடுவதாக கூறப்படுகிறது, அதனால் காட்டுச் செல்லியம்மன் கோவில் மாலை 6 மணிவரை மட்டுமே திறந்திருப்பதாகவும், மாலை 6 மணிக்கு மேல் கோவிலில் பக்தர்களை அனுமதிப்பதில்லை என்ற நடைமுறை இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஊருக்குள் அம்மனை அழைத்து வரமுடிய வில்லையே என்ற ஏக்கம் பொதுமக்களிடம் இருந்தாலும், அம்மன் வெட்டவெளியில் புற்றாக இருப்பதால் அங்கேயே கோவில் அமைக்கும் முடிவுக்கு ஊர் மக்கள் வந்தனர்.

மீண்டும் ஒருமுறை ஊர் மக்கள் சென்று அம்பாளிடம் கோயில் கட்ட அனுமதி கேட்டனர்.

ஆனால் அதற்கு அம்பாள் உத்தரவு கொடுக்காமல் புற்று நீக்கி தரிசனம் செய்ய அனுமதி கொடுத்தாள், அம்பாள் அனுமதிப்படி, ஒரு வியாழக்கிழமையில் புற்றை சிறிது சிறிதாக அகற்றினர், அந்த புற்றில் தீச்சுடர் மகுடமும், நான்கு கரங்களும், சம்மணமிட்டு அமர்ந்த கோலத்தில் சர்வ ஆபரணம் சூடியவளாய் அம்பாள் காட்சி தந்தாள்.

அவை எறும்புப் புற்றில் இருந்து எழுந்தன என்பதைக் குறிக்கும் வகையில் அவளுடன் இரண்டு விநாயகர் சிலைகள் இருந்தன.

அன்று முதல் அந்த இடத்திலேயே வேதைக்கொடிப் பந்தலின் கீழ் ஜன்னி, கொஞ்சை, கருங்காலி, வில்வம், தும்பி போன்ற மூலிகைச் செடிகள் சூழ, அம்பாள் அருள்பாலித்து வருகிறாள்.

தினமும் அபிஷேகமும் ஒரு கால பூஜையும் நடைபெறும். ஆடி மாதம் காய்கறி சீர் கட்டு என்னும் காய்கறி அலங்காரமும் கூழ் வார்த்தலும், சித்திரை 1ம் தேதி தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று உளுந்தால் வடை செய்து மாலையாக்கி அம்பாளுக்குச் சார்த்தி வழிபட்டு பக்தர்களுக்கும் ஊருக்கும் விநியோகம் செய்யும் பழக்கமும் நடைமுறையில் உள்ளது.

அம்பாள் முதன்முதலில் வியாழன் அன்று தோன்றியதால், வியாழக்கிழமைகளில் விஷேச பூஜைகள் நடைபெறும், அன்றைய தினம் அம்பாளை தரிசனம் செய்ய ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். தமிழ் விருப்பிறப்பான சித்திரை

மாதம் முதல் தேதியில் அம்மனுக்கு வடை மாலை சாத்தப்படுகிறது.

குழந்தைவரம் கேட்டு வரும் பக்தர்கள், 9 அல்லது 11 வியாழக்கிழமை கோயிலுக்கு வந்து சென்றால் குழந்தை பாக்கியம் கிடைப்பதாக கூறப்படுகிறது. அவ்வாறு குழந்தை பாக்கியம் கிடைத்த பெரும்பாலான குழந்தைகளுக்கு, செல்லன், செல்லி, செல்லாயி என்று பக்தர்கள் பெயரிட்டு அழைக்கின்றனர்.

அதேப்போன்று பில்லி, சூன்யம், போன்ற பிரச்சனைகளாலும், எதிரிகளாலும் அவதிப்படும் பக்தர்கள், இந்த அம்மனை வேண்டிக் கொண்டுகோவில் வளாகத்தில் பூட்டை காணிக் கையாக செலுத்துகின்றனர். இவ்வாறு பூட்டை பூட்டிவிட் டால் எதிரிகளால் ஏற்படும் பிரச்சனைகள் எளிதாக அடங்கிவிடுவதாக கூறப்படு கிறது.


சன்னதியின் முகப்பு

திருமணத்தை எதிர் நோக்கி இருக்கும் பெண்கள் திருமண பிரார்த்தனையாக 11 அல்லது 51 அல்லது 101 எண்ணிக்கையில் வளை யல்களை அம்பாளுக்கு சாத்து கின்றனர், இதனால் திருமண பாக்கியம் கிடைப்பதாக கூறப் படுகிறது.

கோபுரம், மண்டபம், விமானம், கருவறை, கொடி மரம், பலி பீடம் எனத் தனித்தனியான ஸ்தூல அமைப்புகள் எதுவும் இல்லாத இயற்கை கோயில் இது. சுமார் 36 ஏக்கர் பரப்புள்ள காட்டில் இயற்கை சூழலில் அமைந்துள்ள இயற்கைக் கோயில் இது.

காட்டை ஒட்டி ஏரி, ஏரியின் மறு கரையில் ஊர். ஏரிக் கரையில் செக்கச் செவேல் என அம்மன் காட்சி தந்ததால் செங்கரை என அந்தக் கிராமம் வழங்கப்படுகிறது. சிறிய வெற்றிலையைப் போல் இரண்டு மடங்கு தடிமனும் சிறிய அளவும் உள்ள, சித்த மருத்து வத்துக்குப் பயன்படும் இலைகள் உள்ள கொடி யால் சூழப்பட்டுள்ளது. அந்த இலையில் வாசம் எதுவும் இல்லை.கொடியில் பால் வருவது இல்லை. கொடியில் பூ பூப்பது, காய் காய்ப்பது, பழம் உண்டாவது இல்லை.

ஒவ்வொரு மார்கழி முடிந்து தை மாதம் வரும் போது இலைகள் எல்லாம் கொட்டி பங்குனி மாதம் 15 தேதிக்குள் புதிய இலைகள் தோன்றி புது நிழல் தரத் துவங்கிவிடும். இந்தத் தன்மை கொண்ட வேதைக் கொடி என்னும் தாவரத்தின் பந்தல் ஓரிடத்தில் ஆழக்கால் பதிந்து, கிளை பரப்பியுள்ளது. காலங்காலமாய் வேதைக்கொடி பசுமையாய் அழகாய் பந்தலாய் படர்ந்து நின்று அம்மனுக்கும் பக்தர்களுக்கும் நிழல் தருகிறது.

– கீதாராஜன், ஸ்ரீபெரும்புதூர்.
போன்:94442282033

## ஆன்மிகமலர்.காம் வேண்டுகோள்...

அம்பாள் அமைதியை நாடி, அதிகப்படியான சப்தங்கள், மனித இறைச்சல்களை வெறுப்ப தால் இந்த காட்டிற்குள் குடிகொண்டுள்ளாள், ஆனால் தற்போது இத்திருக்கோவில் அறநிலையத்துறை வசம் உள்ளதால்,கோவி லின் முகப்பு வரை வாகனங்கள் வந்து செல்லும் வகையில் சாலை வசதி செய்யப்பட்டுள்ளது.

இது அம்பாளின் அமைதி விருப்பத்திற்கு மாறாக உள்ளதால், அரைகிலோ மீட்டர் முதல் ஒரு கிலோ மீட்டர் இடைவெளியில் வாகனங்களை நிறுத்தி விட்டு, பக்தர்கள் வரும் வகையில் மாற்றம் செய்ய வேண்டும்.

மேலும் அம்பாள் இயற்கை விரும்பியாக உள்ளதால், காட்டிற்குள் சாலை வசதி போன்றவற்றை அகற்றி இயற்கை சூழ லில் அம்பாளை தரிசிக்கும் வகையில் காட்டுப் பாதை யை மீண்டும் உருவாக்க வேண்டும்.

பொதுமக்கள், பக்தர்களின் வசதியைவிட, தேவி தோன்றி, மறைந்திருந்து அருள்பாலிக்கும் காரணம் முக்கியம், அமைதியை நாடும் அம்மனுக்கு, பக்தர்கள், கோவில் நிர்வாகம், அறநிலையத்துறையும் தொந்தரவு செய்தால் பாவமே வந்து சேரும்.







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதா சமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# தன் உடலை வளர்க்க அடுத்த உடலை புசிப்பவன் எப்படி கருணையுள்ளவனாவான்?

# சைவம்! அசைவம்!! இரண்டின் வேறுபாடு?




தண்ணீரை உறிந்து குடிக்கும் மிருக வகைகள் சைவம். உதாரணம் யானை, ஆடு, மாடு, குரங்கு போன்றவை..

தண்ணீரை நக்கி குடிக்கும் மிருக வகைகள் அசைவம். உதாரணம் சிங்கம், புலி, நாய், பூனை போன்றவை...

தண்ணீரைஉறிந்து குடிக்கும் மிருகங்களுக்கு இயற்கையாகவே குடல் நீளமாக இருக்கும். செரிமானம் தாமதமாக நடந்தாலும் பிரச்சினையில்லை.

தண்ணீரை நக்கி குடிக்கும் அசைவ மிருகங்களுக்கு குடல் சிறிதாகவே இருக்கும்.

செரிமானம் விரைவில் நடந்தே ஆக வேண்டும். மனிதன் இதில் எந்த மிருக வகையில் சேர்ந்தவன்?

தண்ணீரை உறிந்து குடிப்பதால் நிச்சயம் சைவ வகை தான்..

நாம் கீரையும், பச்சை காய்கறிகளையும்மட்டுமே உண்டு நூறு ஆண்டுகள் வாழ முடியும். ஆனால் சிங்கத்திற்கோ புலிக்கோ இது சாத்தியமில்லை!

எங்கே தவறு நடந்தது?

நாக்கு தான்....

வேட்டையாடி உண்டால் தான் உயிர் வாழ முடியும் என்ற நிலையைக் கடந்து, பயிர் செய்து உயிர் வாழுமளவிற்கு நாம் பரிணாம வளர்ச்சி பெற்றாலும் நாக்கு ருசி நமக்கு இன்னும் மாற வில்லை. மறையவில்லை!

சைவ அசைவ ஜீவராசிகளின் உடல் அமைப்பு எப்படி இருக்கும் என்பதைப் பற்றி பார்ப்போம்....?

சைவ ஜீவராசிகளுக்கு பற்கள் மனிதனை போல் தட்டையாக அமைந்துள்ளன.

அசைவ இனங்களுக்கு கூர்மையாக பற்கள் உள்ளன.

சைவ ஜீவராசிகள் அனைத்தும் மனிதனைப் போல் தண்ணீரை உறிஞ்சிதான் குடிக்கின்றன.

அசைவ ஜீவராசிகள் தண்ணீரை நக்கிக் குடிக்கின்றன.

சைவ ஜீவராசிகளுக்கு விரல்கள்மனிதனைப் போல் சிறியதாகவும், பாதம் தட்டையாகவும் இருக்கும்.

அசைவ ஜீவராசிகளுக்கு விரல்கள் நீளமாகவும், கூர்மையான நகங்களுடனும் இருக்கும்.

சைவ ஜீவராசிகளுக்கு மனிதனைப் போன்றே பதினைந்து அடி வரை நீளமான குடலாக உள்ளது. காரணம், சைவ சாப்பாட்டில் நச்சுத் தன்மை குறைவாகவும், சத்துக்கள் அதிகமாகவும் இருப்பதால் உணவானது குடலில் சற்று அதிக நேரம் இருப்பதற்கான ஏற்பாடு.

அசைவ ஜீவராசிகளுக்கு அசைவ உணவில் நச்சுதன்மை அதிகம் உள்ளதால் மிக குறைவான நேரத்தில் குடலை விட்டு வெளியேறு ஏற்றாற் போல் ஐந்து அடிகள் மட்டுமே குடலின் நீளம் உள்ளது.

சைவ ஜீவராசிகளுக்கு மனிதனைப் போன்றே உடலில் வெப்பம் அதிகமானால் தாகத்தை




மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர்
மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்


உண்டாக்கி அதிக தண்ணீர் பருக வைத்து வியர்வை என்ற செயலின் மூலமாக உடலை குளிர்விக்கிறது.

அசைவ ஜீவராசிகளுக்கு இந்த ஏற்பாடு இல்லை. ஆதலால் தனது நாக்கினை தொங்க விட்டுக் கொண்டு அது தன்னை குளிர்விக்கிறது.

சைவ ஜீவராசிகளுக்கு மனிதனைப் (சைவம் சாப்பிடும் மனிதன்) போன்றே மலம் கழிப்பதில் சிரமம் இருக்காது. மலம் துர்நாற்றம் வீசாது.

அசைவ ஜீவராசிகளுக்கு (அசைவம் சாப்பிடும் மனிதன் உட்பட) மலம் கழிப்பதில் சிரமமும், மலம் அதிக துர்நாற்றத்துடனும் இருக்கும்.

மேற்கண்டவகையில்தான் சைவ அசைவ ஜீவராசிகளின் உடற்கூறு அமைப்பு உள்ளது.

சைவ அசைவ ஜீவராசிகளின் மனநிலையைப் பற்றி பார்ப்போம்...?

சைவ ஜீவராசிகள் ஒற்றுமையாக அதாவது கூட்டம் கூட்டமாக வாழும். மனிதனும் அவ்வாறே வாழ ஆசைப்படுகிறான்.

அசைவ ஜீவராசிகள் தனித்தனியாக வாழும் இயல்புடையது. தன் எல்லைக்குள் தன் இனத்தைச் சார்ந்த இன்னொரு விலங்கினை அனுமதிக்காது. (அசைவத்திற்கு மாறியதால் மனித இனத்தின் இன்றைய நிலையும் இதுதான்.)

சைவ ஜீவராசிகள் இயல்பான குணம் சாந்த மாகவும், அமைதியாகவும் இருக்கும்.

அசைவ ஜீவராசிகள் வேகமாகவும், ஆக்ரோச மாகவும் இருக்கும்.

சைவ ஜீவராசிகளை ஆக்கபூர்வமான வேலை களில் (உழுதல், வண்டி இழுத்தல்) ஈடுபடுத்த முடியும்.

அசைவ ஜீவராசிகளால் இவ்வாறான செயல் கள் எதுவும் செய்ய இயலாது.

ஒவ்வொருவரின் உடலிலும் அபாயகரமான சமயங்களில் தப்பித்துக் கொள்வதற்காக (உட லிற்கு அதிக இயக்க சக்தியை தர ) சக்தி வாய்ந்த ஹார்மோன்கள் அட்ரீனல் சுரப்பியிலிருந்து சுரந்து இரத்தத்தில் கலக்கும்.

இந்த நீரானது ஒவ்வொரு விலங்கும் வெட் டப்படும் போது அதிக அளவில் சுரந்து அதன் இரத்தத்திலும், சதைகளிலும் கலந்து இருக்கும். இவற்றை உட்கொள்ளும் மனிதன் தன் சாதாரண வேலைகளிலும் கூட ஏதோ அபாயத்தில் உள்ளது போன்ற உணர்வைப் பெறுகிறான். அசைவ உணவு சாப்பிடுபவர்கள் அதிக மன இறுக்கத்திற்கு உள்ளாவதற்கு இதுதான் காரணம்.

மனிதன் ஆறாவது அறிவை சற்றும் பயன்படுத் தாது அதிக சக்தியும், பலமும் வேண்டியே தான் அசைவம் சாப்பிடுவதாக எண்ணுகிறான்.

சைவத்தில் தான் அதிக சக்தியும், பலமும் உள்ளது.சைவம் சாப்பிடும் யானைக்கு பலத்தில் என்ன குறை?

உதாரணமாக சோயா பீன்ஸில் நாற்பது சதவீதம் சுத்தமான புரோட்டீன் உள்ளது. இது மாமிசத்தில் உள்ளதை விட இரு மடங்கும், முட்டையில் உள்ளதை விட நான்கு மடங்கும் அதிகமாகும்

மேற்கண்ட இந்த ஆராய்ச்சியின் அறிய வேண்டியது. இயற்கையின் அமைப்பு படி மனிதன் உட்கொள்ள வேண்டியது சைவமே !

எனவே, மனிதன் ஆரோக்கியமாக, அமைதி யாக, நிம்மதியாக, பொறுமையாக, பலசாலியாக, ஒற்றுமையுடனும், கோபம் இல்லாமல்,மன இறுக்கம், மலச்சிக்கல், நோய் இல்லாமலும் வாழ ஆசைப்படுவான் எனில் சைவமே உட்கொள்வது காலச் சிறந்தது.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான் எங்ஙனம் ஆளும் அருள். என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

இதன் பொருள் தன் உடலை வளர்ப்பதற்காக வேறொரு உயிரின் உடலை உணவாக்கிக் கொள் பவர் எப்படிக் கருணையுள்ளம் கொண்டவராக இருக்க முடியும்.

எப்போதும் சைவத்தை நாடினால் உடலுக்கும் மனதிற்கும் எந்தப் பிரச்சனையும் இல்லை.

அசைவத்தை நாடும்போது உடலுடன் சேர்ந்து மனமும் பாதிப்புக்குள்ளாகிறது.


Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 170 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை



பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...

eBook

**aanmeegamalar.com**



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com